SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams :
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone :
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 14-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு சித்திரைமாசம் 13-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

# திருயாத்திரைக் கன்னிகை

வண. G. V. I. சாமா சுவாமிகள், S. J.

### கண்கொள்ளாக் காட்சி

மாதாவின் மகத்துவத்தைக் கண்டேன். மாதாவின் பக்திப் பெருக்கில் மிதந்து சென்றேன். மாதாவிற்கு வணக்கம் செலுத்த வந்த பக்தகோடிகளின் திரளைக் கண்டு மகிழ்ச்சியுற்றேன். சிறப்பலங்கார இரதத்தில் பாத்திமா மாதாவின் சுரூபம் பவனிவரும் கண்கொள்ளாக்காட்சியைக் கண்டு தேவாதி தேவனுக்குப் புகழ்சாற்றினேன். இவ்வியப்பு நான் அடைந்தது, சமீபத்திலே கோயம்புத்தூர், திருச்சூர், எர்ணாக்குளம் முதலிய மேற்றிராசனங்களிலிருக்கும் பாலர்சபை, விசுவாசப்பரப்புதல்சபைகளைப் பார்வையிடச்சென்ற சமயம், உலகதிருயாத்திரைபுரியும் தேவகன்னிகையும் அவ்வழியே வருவதைக் கேள்வியுற்று என் பாக்கியமே பாக்கியமென்று திவ்விய யேசுவுக்கு நன்றிபுரிந்தேன்.

### திருயாத்திரையின் காரணம்

இவ்வற்புதசுரூபம் உலகப் பிரயாணம்செய்வதின் காரணம் யாது? 1917-ம் ஆண்டு வைகாசி மாதம் 13-ந் திகதி செபமாலை இராக்கினி போர்த்துக்கால் தேசத்தின் ஓர் சிறு கிராமமாகிய பாத்திமாவில் தரிசனையளித்து உலகிற்குச் சமாதானம் அருளியதிலிருந்து பக்தர்கள் பாத்திமாமாதாவின் சுரூபத்தைத் தரிசித்துவந்தனர். திரளானவரங்களையும் பெற்றனர். பெற்றுக்கொண்டும் வருகின்றனர். ஆயினும் எத்தனையோ பேர் அப்புனித ஸ்தலத்திற்குப் போகமுடியாமலும், மாதாவின் சுபசெய்தியைக்கேட்டு ஞான ஒளியடையாமலும் உட்கார்ந்திருக்கின்றனர். இக்குறையைத் தீர்த்து, மாதாவின் அருள்பிரவாகம் உலகெங்கும் பாயவும், மாதாவின் சுபசெய்தியை எங்கும் பிரசாரம்செய்யவும் சேவைபுரியப் போர்த்துக்கால்தேசகத்தோலிக்க சேவாசங்கத்தினர் வெகுவாக விரும்பினர். மாதாவின்பத்தி கத்தோலிக்கசேவையின் சீவநாடியன்றோ?

சுமார் மூன்றுவருடங்களுக்கு முன் கூடிய அகில போர்த்துக்கேய மாதர்சேவாசங்க மகாநாடொன்றில், மாமரிக்குச் சேவைபுரிய ஏற்றவழி, பாத்திமாமாதாவின் சுரூபத்தையே உலகெங்கும் திருயாத்திரையாகக் கொண்டுசெல்வது என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் அகில போர்த்துக்கேய மாதர்சேவாசங்கதலைவி திருமதி மரியதெரேசா. ஆனால், நல்ல சேவைக்கு நானூறு இடைஞ்சல். இந்நல்லசேவைக்கும் விக்கினங்கள் பலவற்றை எடுத்துச்சொல்லவே தீர்மானம் நிறைவேறாமல் போயிற்று.

அதேசமயம், அமலோற்பவ மாதா சபையைச்சேர்ந்த வண. து மூட்டியஸ் சுவாமியார் (Rev. Fr. Du Moutiez O. M. I.) பெல்ஜியதேச வழக்கப்பிரகாரம், தியானபிரசங்கங்கள் முடிந்ததும் ஒருபங்கிலிருந்து மற்றொருபங்கிற்கு ஓர் சிறிய மாதாவின் சுரூபத்தைச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுபோவார். ஒருசமயம் அவர் ஏன் மாதாவின் சுரூபத்தை உலகெங்கும் கொண்டுசென்று மாதாவின் பக்தியைப் பரவச்செய்யக்கூடாதென்று சிந்திக்கலானார். இவ்வுலக பயணத்திற்குப் பொருத்தமானது, உலகிற்குச் சமாதான வரம்பொழிந்த பாத்திமாமாதாவின் சுரூபந்தான் என்று தமக்குள் திட்டமிட்டுக்கொண்டார். தற்செயலாக, ஓர் பத்திரிகையில் போர்த்துக்கால் மாதர்மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தையும் கவனித்தார். ஊக்கங்கொண்டார். அத்தலைவிக்குக் கடிதம் எழுதினார். அவளிடமிருந்தும், மற்ற அதிகாரிகளிடமிருந்தும், சகல உதவியும் சுலபமாகப் பெறக்கூடுமென்று அறிந்துகொண்டார்.

### அனுமதி கிடைத்த விதம்

இதைப்பற்றி ஞான அதிகாரிகளைக்கேட்டு அனுமதி பெற வண. சுவாமியாரும், திருமதி சேவாசங்கத் தலைவியுமாகிய இருவரும் முயற்சித்தனர். பாத்திமா குக்கிராமம், லீரா மேற்றிராணியாரது அதிகாரத்தின்கீழ் உள்ளது. அம்மேற்றிராணியாரை அணுகியதும் பாத்திமா பரமநாயகியின் சித்தத்தை நன்கு அறிந்த சங். லூசியம்மாளைக் கேட்டுக்கொள்ளலாமே என்று அவர் பதிலளித்தார். கார்மேல் மடத்தில் கன்னிகையாயிருக்கும் லூசியம்மாளுடைய ஆலோசனையைக் கேட்கவே, "தாராளமாகப் பாத்திமாமாதாவின் சுரூபத்தை எங்கும் எடுத்துச்செல்லுங்கள். மரியாயின் மாசற்ற இருதயப்பக்தியை எங்கும் பரவச்செய்யுங்கள். சகலரும் செபமாலை செபிக்க வற்புறுத்துங்கள். பாத்திமா மாதாவின் சுபசெய்தியைச் சகலருக்கும் அறிவியுங்கள். இதுவே நம் தேவஅன்னைக்கு மிகவும் உகந்தசேவை" என்று அழுத்தந்திருத்தமாகப் பதிலளித்தாள் லூசி. "உலகெங்கும் கொண்டுசென்றபின், ருஷியாவின் எல்லைப்புறங்களுக்கும் கொண்டு போகலாமென்று எண்ணியிருக்கிறோம்" என்றார் வண. மூட்டியஸ் சுவாமிகள். "ஏன் ருஷியாவின் எல்லைப்புறமட்டும்? ருஷியாவிற்குள்ளும் பாத்திமா மாதாவின் சுரூபத்தைக் கொண்டு போங்களேன்" என்று வீரமாக ஊக்கினாள் அக்கன்னிகை.

### எந்தச் சுரூபத்தைக் கொண்டு செல்வது ?

மாதாவின் உலக யாத்திரையைப்பற்றித் தீர்மானித்தபின் எந்தச்சுரூபத்தைக் கொண்டு போவதென்று ஆலோசித்தனர். மறுபடியும் லூசியம்மாளிடம் சென்று கேட்க, அநேக வருடங்களாகத் தன் மேற்பார்வையிலேயே, தன் வர்ணனைப்படியே ஓர் சிற்பியால் அழகுற அமைக்கப்பட்டுத் தற்போது லீரா மேற்றிராணியாரிடமிருக்கும் சுரூபத்தை எடுத்துச்செல்லுங்கள்என்றாள் லூசி. உடனே யாதொரு ஆட்சேபனையுமின்றி லீரா மேற்றிராணியாரும் அச்சுரூபத்தைப் பரமநாயகியின் உலகயாத்திரைக்காகக் கொடுத்துதவினார்.

உலகின் பல்வேறு பாகங்களுக்கும் கொண்டுபோகப்பட்டுவரும் பாத்திமா மாதாவின் சுரூபம் இது ஒன்றே. இதுவே அதிகாரபூர்வமாக உலக திருயாத்திரைக் கன்னியாக ஆசீர் அளிக்கும் பாத்திமாமாதாவின் சுரூபம். மாசிமாதம் 4-ந் திகதி மதுரைக்கு வந்ததும் இச்சுரூபந்தான். இதுவே இன்னும் இந்தியாவின் பல்வேறு பாகங்களுக்கும், இலங்கை, சிங்கப்பூர், சீனா, யப்பான், ஏனைய தீவுகள், ஆஸ்திரேலியா, தென் அமெரிக்காவுக்கும் போகவிருக்கும் சுரூபம்.

### திருச்சுரூபத்தின் சாயல்

இச்சுரூபத்தின்சாயல் ஓர்தனி மதிப்புள்ளது. மாதாவின் உருவம் சற்றுத் துக்ககரமாயும், சோகமுடையதாயும் அதே சமயம் அருள்மயமாய் அன்புடன் நமது உள்ளத்தையே ஊடுருவி நோக்கி நம்மைப் புனிதப்படுத்திக்கொள்ள ஏவித் தூண்டுவதாயுமுளது. உயிர்த்துடிப்புடன் நோக்கும் கண்கள் அக்கண்கள். செபிக்க நம்மை அழைக்கும் குவிந்த கரங்கள். புனிதகற்பின் ஒளிவீசும் தூய வெண்உடை. இச்சுரூபத்தின் கிட்டச் செல்லும்பொழுதே "மகனே! பரிசுத்த இடம்! இங்கு தூய்மையுள்ளவர்தான் வரவேண்டும். பாவசங்கீர்த்தனத்தில், யேசுவின் திருஇரத்தத்தில் உன்னையே தூய்மைப்படுத்திக்கொண்டபின் இங்கு வரவும்" என்று நம்மைஅறியாமலே நம்மிடம் ஓர் மனக்குரலொலி கேட்கும். அவ்விதமே பாத்திமாமாதாவின் சுரூபம் செல்லுமிடங்களிலெல்லாம் திரளானசனங்கள் பாவசங்கீர்த்தனத்தொட்டியை இராப்பகலாகச்சூழ்ந்திருப்பதை நானே கண்டுள்ளேன். ஞானஒடுக்க சமயம்போல் பொதுப்பாவசங்கீர்த்தனம் செய்துகொள்ளும் பக்தர்களைக் கணக்கிடவேமுடியாது.

திருயாத்திரைக் கன்னிகை விஜயம்செய்த இடங்களிலெல்லாம் செபமாலைப்பக்தி அதிகரிக்கின்றது. மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ஒவ்வொருவரும் காணிக்கையாகத் தம்மையே கையளிக்கின்றனர். பாவிகள் மனந்திரும்பவும், தங்கள்பாவங்களுக்குப் பரிகாரமாகவும் ஒருசந்தி உபவாசமாயிருப்பவர்கள், தபசுபுரிபவர்கள் அனந்தம். பாவவிலக்கறுத்து மனமாறுதலுற்று ஐந்துமுதற்சனிக்கிழமைகளில் பரிகார நன்மையுட்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# ஐந்தாவது முத். பட்டம்

## ஐந்தாவது முத். பட்டம்

மாரிகாலத்து முதலாவது தொகுதியான முத்திப்பேறுபெற்றபட்ட திருவைபவங்கள் சென்றபங்குனிமாதம் 19-ந்திகதி ஞாயிறுவாரம் போல் எலிசபேத் செறியோலிஅம்மாளுக்கு அருளப்பெற்ற அப்பட்டத்துடன் முடிவடையலாயின. இப்பரிசுத்தவருடத்தில அருளப்பட்ட ஐந்தாவது முத்திப்பேறுபெற்றபட்டம் இதுவாகும். இந்தஐந்து திருப்பட்டதாரிகளும் வாழ்க்கையில் பலவேறு அந்தஸ்தினராவர். ஒருவர்குருவானவர். இருவர் கன்னியாஸ்திரிமார். ஒருவர் அர்ச். ஜோண்பொஸ்கோவின் மாணவரான பாலியர். கடைசியாக இப்பட்டம் அருளப்பெற்ற முத். போல் எலிசபேத் செறியோலி ஓர்விதவை. இவள் பிரபுத்துவ குடும்பம்ஒன்றில் 1816-ம் ஆண்டுபிறந்து தனது 37-ம்வயசில் ஓர் விதவையானபின் கன்னிகாமடத்திற் சேர்ந்து இளம்பெண்பிள்ளைகளுக்கும் பையன்களுக்கும் கமவேலைபயிற்றுதற்கான திருக்குடும்ப கன்னிகாசபையை அடியிடுவதில்அயராதுழைத்து 1865ம் ஆண்டு பரிசுத்தம்பரிமளிக்கப் பரமபதம் அடைந்தாள். பாஸ்குஞாயிறுக்கு இருவாரங்களின்பின் இனிச்சூட்டப்படுவது அர்ச்சியசிஷ்டபட்டமாகும்.

## பாப்பரசரும் வழக்கறிஞரும்

திரு. ஜோர்ஜ் ஜிலெஸ்பியே எனும் 80 வயசுடைய நியூயோர்க்நகர வழக்கறிஞர் தமதுரோமாபுரிப் பரிசுத்தவருட திருயாத்திரையின் ஞாபகசின்னமாகப் பரிசுத்தபாப்பரசர் தரிப்பது போன்ற 'சுசெற்ரோ' எனும் சிறிய வெள்ளை வட்டத் தலைக்கவசம்ஒன்றை விலைகொடுத்து வாங்கிக்கொண்டார். நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவர் தலைமையிலே நியூயோர்க்நகர யாத்திரிகர்களுக்குப் பாப்பரசர்அளித்தபேட்டியிலே இந்தவழக்கறிஞர் தாம் ஞாபகசின்னமாக விலைக்குவாங்கிய அந்தத் தலைக்கவசத்தை ஆசீர்வதிக்குமாறு பரிசுத்தபிதாவைக் கேட்டுக்கொண்டார். அப்போது பாப்பரசர் "எனது தலைக்கவசத்தைநீர்எடுத்துக்கொள்ளும். உமதுகவசத்தை நாம் எடுத்துக்கொள்ளுகிறோம்" எனக்கூறித் தமதுகவசத்தை உடனேஎடுத்து அவர்தலையில் வைத்துவிட்டார். இற்றைக்கு மூன்று வருடங்களின்முன்னர் ஸ்பெல்மன் ஆண்டவர் ஓர் கருதினாலானபோது பாப்பரசர் தமது சிவப்புச்சீராவை அவருக்குக் கொடுக்கலாயினர்.

## ரேடியோ குருவானவர்

ஸ்பானியதேச ரேடியோ குருவென அறியப்படுகிறவரான வண. வெனான்சியோ மார்கொஸ்சுவாமியார் வாரம்ஒன்றுக்குப் பத்துப்பேர்வீதம் மனந்திருப்பிக் கொண்டுவருகிறார். 1944-ம்ஆண்டு இவர் ரேடியோமூலம் வேதவிஷயமாய்ப் பேசத்தொடங்கியதுமுதல் 2,300 பேர் இவரால்மனந்திருப்பப்பட்டிருக்கின்றனர். அதுமுதல் வேதசம்பந்தமாய் ஆலோசனைகேட்பதற்கும், வேதசத்தியங்களைப் படிப்பதற்குமாக ஆறாயிரம்பேருக்கு மேற்பட்டோர் இவரைக்கண்டு பேசியிருக்கின்றனர். எண்ணாயிரம் கடிதங்களுக்கு மேல் இவருக்கு அனுப்பிவைத்திருக்கின்றனர்.

## இளவரசரின் திருயாத்திரை

மொனாக்கோநாட்டின் றேய்னியேறி இளவரசர் ரோமாபுரிக்கு யாத்திரை செய்து, சென்றபங்குனிமாசம் 18-ந்திகதி அரைமணிநேரம்வரையில் பாப்பரசரின்பேட்டி பெற்றுக்கொண்டார். இவர்தமது இராசமகத்துவத்துக்குரிய ஆடம்பர மரியாதைகளுடன் வரவேற்கப்பெற்றுப் பேட்டிமுடிந்ததும் அர்ச். பேதுருவானவர் ஆலயஞ்சென்று திவ்வியநற்கருணைப்பலிபீடம், தேவதாயின் பலிபீடம், அறிக்கையின்பீடம் ஆகியவற்றின்முன்பாகச் செபஞ்செய்யலாயினர். ஆலயத்தைவிட்டு அவர் வெளிகொண்டபோது பாப்பரசர் மாளிகைக் காவல்வீரர்கள் முன்போல அணிவகுத்துநின்று அவருக்குமரியாதை செய்தார்கள். அத்தருணம் மொனாக்கோவின் தேசீயகீதத்தையும், பாப்பரசின்கீதத்தையும் பாண்டுவாத்தியங்கள் இசைத்துநின்றன.

## யப்பானிய பிரதமநீதியரசர்

யப்பானிலே முதன்மைவாய்ந்த கத்தோலிக்க பிரமுகரான டக்றர் கொட்ரரோ ரனகா அவர்கள் அத்தேச சுப்பிறீங்கோட்டுப் பிரதமநீதியரசராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இந்தப்பதவி அங்கே பிரதமமந்திரிபதவிக்கும், பாராளுமன்றச் சபாநாயகர்பதவிக்கும் சமமானது. புதியபிரதமநீதியரசர் கீர்த்திவாய்ந்த ஓர்நியாயவாதியாவர். சட்டதத்துவசாஸ்திரத்தில் பெற்றபயிற்சியே இவர்தமது புரொட்டஸ்தாந்த நம்பிக்கைகளைக் கைவிட்டு 1920-ம்ஆண்டு இவரை ஓர் கத்தோலிக்கராகும்படி வழிபண்ணியது. இவர் ஏறக்குறைய முப்பதுநூல்களின் ஆசிரியராய் விளங்குகின்றார். இவற்றில் அதிகமானவை சட்டதத்துவசாஸ்திர சம்பந்தமானவைகள். இவருக்குத்தற்போதுவயசு 59. பாப்பரசரின் நைற் பட்டவர்த்தனரான இவர் ரோமாபுரியிலே கிறகோரியாரின் சர்வகலாசாலையில் சொற்பொழிவாற்றியிருக்கின்றார். 1946-ம்ஆண்டு இவர்யப்பானிய கல்வி மந்திரியாய் இருந்தார்.

## திருச்சபையின்காணிகள்

இத்தாலியில் கத்தோலிக்கதிருச்சபையே மிகப்பெருந்தொகையான காணியைச் சொந்தமாகக்கொண்டிருந்தபோதிலும் அத்தேசத்திலுள்ள பெரியதோட்டங்களைச்சேர்ந்த 45 லட்சம் ஏக்கர் காணியைஎடுத்துக் காணியில்லாத கிராமவாசிகளிடையே பகிர்ந்துகொடுப்பதற்கென்று அரசாங்கம் செய்துவரும் திட்டத்தால் அதுபாதிக்கப்படமாட்டாது. ஏனெனில், திருச்சபைக்குச்சொந்தமான 11 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர்காணியும் ஏலவே ஆயிரக்கணக்கானசனங்களுக்குப்பகிர்ந்துகொடுக்கப்பட்டிருக்கிறது. பயிர்ச்செய்கைக்கேற்றநிலமும். காட்டுநிலமுமாக இத்தாலியிலுள்ள ஏழுகோடி ஏக்கர்நிலத்திலே திருச்சபைசொந்தமாகக் கொண்டிருப்பது ஏறக்குறைய எழுபதில் ஒருபங்கேயாகும். இதில் பெரும்பாகம்மார்செஸ்மாகாணத்திலே அதிரியாற்றிக்கடற்கரைநீளம் இருக்கின்றது.

## கம்யூனிஸஎதிர்ப்பு முன்னணி

கம்யூனிஸத்துக்கும், நாஸ்திக–சமயவிரோத தீயபலங்களுக்கும் எதிராக உலகமுன்னணிஒன்றை உருவாக்கும் மற்றோர்இயக்கம் வத்திக்கானால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ரோமைநகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ரோமான்கத்தோலிக்க திருச்சபைக்கும், ஏனையமேல்தேசங்களின் கிறீஸ்தசபைகளுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பை உண்டுபண்ணுவதற்கென்று வத்திக்கானின் திட்டங்களை எடுத்துக்காட்டும் பத்திரங்கள் அங்கீகரிக்கப்பெற்று, அவற்றின்பிரதிகள் ஐந்துபாஷைகளில் விரைவிலே கிடைக்கக்கூடியனவாய் இருக்கும். எகிப்திய அரசாங்கம் வத்திக்கானுக்கு அனுப்பியுள்ள இராசீயநடவடிக்கைஒன்றிலே சமயகோட்பாடுகளிலுள்ள வேறுபாடுகளைக்கவனியாது "கடவுள்பயமுள்ள" தேசங்கள் ஒன்றுசேர்ந்து சர்வதேசகம்யூனிஸத்திற்கு எதிராக ஓர் ஐக்கிய நடவடிக்கை அவசியம் எடுக்கப்படவேண்டுமெனத் தூண்டியிருக்கிறது. எகிப்தியஇராசீயப் பிரதிநிதிகளின்கூட்டம்ஒன்று சமீபத்தில் பெய்ரூநகரில் நிகழ்ந்து, அதற்கானஓர்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

### பாஸ்குத் திருநாளுக்குப்பின்

## 1-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 20: 19—31)

அக்காலத்தில் வாரத்தின் முதல்நாளாகிய அன்றைய தினம் சாயங்காலமாகி, சீஷர்கள்கூடியிருந்த வீட்டின் கதவுகள் யூதர்பயத்தின் நிமித்தம் சாத்தப்பட்டிருக்கிறபோது யேசுநாதர்வந்து நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம்உண்டாகுக! என்று அவர்களுக்குச் சொன்னார். அன்றியும் அவர் இதை வசனித்த பின்பு தம்முடைய கரங்களையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆதலால், சீஷர்கள் ஆண்டவரைக்கண்டதைப் பற்றிச் சந்தோஷப்பட்டார்கள். அவர் மறுபடியும் அவர்களைப் பார்த்து: உங்களுக்குச் சமாதானம் உண்டாகுக! பிதா என்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். அவர் இவைகளைச் சொன்னபின்பு அவர்களின் மேல்ஊதி அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இஸ்பிரீத்துசாந்துவானவரைப்பெற்றுக் கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படாதிருக்கின்றன என்றார். பன்னிருவரில் ஒருவராகிய திதீம் என்னப்படுகிற தோமையாரோவெனில் யேசுநாதர்வந்தபோது அவர்களோடிருக்கவில்லை. ஆகையால் மற்றச்சீஷர்கள்: ஆண்டவரைக் கண்டோம் என்று அவரிடஞ் சொன்னபோது, அவர்: நான் அவருடையகரங்களில் ஆணிகளின் துவாரத்தைக்கண்டு, ஆணிகளின் இடத்தில் என் விரலை விட்டு, அவருடைய விலாவில் என்கரத்தை விட்டாலொழிய விசுவசியேன் என்று சொன்னார். எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் மறுபடியும் உள்ளே இருந்தார்கள்; அவர்களோடு தோமையாரும் இருந்தார். கதவுகள் சாத்தப்பட்டிருக்கையில் யேசுநாதர்வந்து நடுவிலேநின்று: உங்களுக்குச்சமாதானம் உண்டாகுக! என்றார். பின்னும்தோமையாரைநோக்கி: இங்கே உன்விரலைஇடு, என் கரங்களைப்பார், உன்கரத்தையும்நீட்டி என்விலாவிலேவை; இனிஅவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருஎன்று திருவுளம்பற்றினார். தோமையார் மறுமொழியாக: என்ஆண்டவரே! என் தேவனே! என்க; தோமையே, நீ என்னைக்கண்டதினால் விசுவசித்தாய், காணாதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் என்று யேசுநாதர் அவரிடம் கூறினார். இப்புத்தகத்தில் எழுதப்படாத வேறு அநேக அற்புதங்களையும் மெய்யாகவே யேசுநாதர் தம்முடையசீஷர்கள் முன்பாகச் செய்தருளினார். ஆனால் யேசுநாதர் சர்வேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துவாயிருக்கிறார் என்று நீங்கள் விசுவசிக்கும்படியாகவும், விசுவசித்து அவருடைய நாமத்தால் நித்தியசீவியத்தை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக!

## சமாதானமன்றாட்டு

திருப்பாடுகளின்ஞாயிறன்றுபரிசுத்த பாப்பரசர் 15 கருதினால்மார், 40 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், சுமார் 40,000 யாத்திரிகர்கள் கூடியிருந்தசமுகத்திலே, உலகமுழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான கத்தோலிக்கமக்களுடன் ஞானவிதமாக ஒன்றித்துச் சமாதானத்துக்காகச் செபஞ்செய்யுமாறு அர்ச். பேதுருவானவர் ஆலயஞ்செல்லலாயினர். அத்தருணம் அவர்அதிகம் சுகமுடையவராகக்காணப்பெற்றார். "ஓ! கர்த்தாவே! உமதுவல்லபத்தைக்கொண்டு குரோதவிரோதத்தை நிறுத்திவிடும். அதிகாரவேட்கையை, அழிவின்யுத்தங்களைச்சிதறடித்துவிடும். பிள்ளைகளுக்கு ஆகாரம்கொடும். இல்லிடமற்றோருக்கு உறைவிடம்கொடும். பிழைப்பற்றோருக்கு வேலைகொடும். தேசங்கள்மத்தியில் சித்தஒற்றுமையும், எல்லோரினதும் நித்தியஈடேற்றத்துக்காக உலகத்துக்குச் சமாதானமும் உண்டாகச் செய்யும்" என்று அவர்கூறியபோது அவர்குரல் உறுதிஉடையதாய் இருந்தது.

## நானாசங்கதிகள்

— பாப்பரசரின் கோடைகால வாசஸ்தலத்தைச் சூழவர மேலும் 25ஏக்கரைப் பாப்பரசரின் மேலதிக இராச்சிய உரிமைக்கென விட்டுக்கொடுக்க இத்தாலியபாராளுமன்றம் சம்மதித்திருக்கிறது. அதனால் அங்கு புதியதும், பலமிக்கதுமான ஓர்ரேடியோ நிலையம் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

—பம்பாய்நகரில்மாத்திரம் 15,000 பிச்சைக்காரர் இருந்துவருகின்றார்கள், இவர்களில் அரைவாசிப்பேரும் ஏதோ தொழில்செய்துபிழைக்கக்கூடிய நல்ல தேகக்கட்டு உடையவர்களாம். அதனால் இவர்களைக்கைதுசெய்து காவலில்வைத்துத் தொழில்பயிற்றுவதற்கான சட்டம்ஒன்றைப் பம்பாய் அரசாங்கம் செய்திருக்கிறது.

—"தங்கள்கரிசனையான சோபன செய்தியை நாம் இருதயபூர்வமாகப் பாராட்டித் தங்கள்மீதும், இந்திய அரசாங்கத்தின்மீதும், இந்தியமக்கள்மீதும் சர்வவல்லப சர்வேசுரனிடமிருந்து ஏராளமான ஆசீர்வாதங்களை இரந்து கொள்ளுகிறோம்" என்று பாப்பரசர் தமதுமகுடதாரண விழாவின்போது வாழ்த்துச்செய்தி அனுப்பிய இந்திய பிரசாதிபதிக்குப் பதிற்செய்தி அனுப்பியிருக்கின்றார்.

—அமெரிக்கஐக்கியதேச மோட்டார்ரத தொழிற்சாலைகளிலே சென்ற 1949-ம்ஆண்டில் செக்கன்ஒன்றுக்கு ஓர்மோட்டார்ரதம்வீதம் கட்டப்பட்டிருக்கிறது. அவ்வருடத்திலே மோட்டார்கார்களும், பஸ்களும், லொறிகளுமாக மொத்தமாய் 62 லட்சம் ரதங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குமுன் இவ்வளவுதொகையான ரதங்கள் எந்தஒருவருடத்திலாவது அங்கு கட்டப்படவில்லையாம்.

—பாப்பரசர் சமீபத்திலே தமக்குண்டான நோய்குணமடைந்து அந்தரங்கபேட்டிகளும், பகிரங்கபேட்டிகளும் அருளத்தொடங்கியபோது பரோடாமகாஇராணியாருக்குப் பிரத்தியேகபேட்டி அருளினாரெனச் சமாச்சாரம் எட்டியிருக்கிறது.

— யூ-போட்எனப்படும் நீர்மூழ்கிகளின் ஆபத்துகளை வருகால யுத்தங்களில் விலக்கிவைப்பதற்கான ஓர்சாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அமெரிக்க ஐக்கியதேச நெப்ரியூன் ஆகாயவிமானமாகும். இது கடலினுள் நீர்மூழ்கிகளைத் தேடித் தூரத்து நிர்மூலஞ்செய்யக்கூடியதாம்.

# தூதுசென்ற சூசைமாதவன்

[ "தேம்பாவணியை" ஆதாரமாகக்கொண்டு எழுதியது. ]

(முன்தொடர்ச்சி)

மட்புலம்தவிர் நாம்களி மாந்திடக்
கட்புலம்தவிர் தன்கவின் காட்டஈங்(கு)
எட்புலம்தவிர் காந்தியோ(டு) எய்திய
விட்புலம்தவிர் விண்ணவனோ என்பார்

அப்போது சூசைமாதவனைக்கண்டு அங்கிருந்த தவத்தோர்கள் அதிசயப்பட்டு—பூவுலகைவிட்டு இங்கேவந்தநாங்கள் களிகூரும்படியாகக் கண்ணைக்கடந்த தனதழகினைக் காட்டவென்று மனதைக்கடந்த மாசில்லாதகாந்தியைப் பரப்பிக்கொண்டு வானுலகைவிட்டுவந்த ஓர்வானவனோ இவன் என்பார்கள்.

ஆதிஈறில நாயகன் அம்புவி
மீதில் ஈ(று)உயிர் ஆகவிளிந்(து) ஒரு
தீதிலாக்கதி வாயில் திறந்தபின்
ஏதில்நாம்அடை மாட்சிஇதோ என்பார்

(அல்லது) தொடக்கமும் முடிவும்இல்லாத பரமநாதன் பூவுலகில் அவதரித்து எடுத்தமனுச்சுபாவத்தில் கடைசியாக உயிரையேதந்து இறந்து ஒருகுறையுமில்லாத பரமகதியின் வாயிலைத்திறந்ததன்மேல் குற்றமில்லாது நாம்அடையும் மாட்சியின் தன்மை இதுதானோ என்பார்கள்.

ஐயம்தோன்று மனத்(து) அயர்(வு) அற்றிடச்
சையம்தோன்றிய தோள்தவழ் தாரினன்
துய்யம்தோ(டு)அவிழ் பூங்கொடி சுட்டுபு
மையம்தோன்றி இவ்வாயுரை போக்கினன்

அங்ஙனம் சந்தேகந்தோன்றிய மனதிற்கொண்ட சஞ்சலம் தீரும்படியாகப் பொன்மலைஒத்த தோளிற்தவழ்கின்ற மாலை தரித்தவனாய்த் தோன்றிய சூசைமாதவன் தூய்மையான பூஇதழ்கள் மலர்ந்த தன்பூங்கொடியைச் சுட்டிக்காட்டி அவர்களின் நடுவில்நின்று இவ்வுரைகளைச் சொல்லலாயினன்.

வையத்தார் கச(டு)அழித்து
வழுவின்றி மன்னுயிர்கள்
உய்யத்தான் மனுஆய
உயர்கடவுள் உமக்(கு)இன்பம்

செய்யத்தான் இன்(று)இங்கண்
செலுத்தியதோர் தூ(து)அடியேன்
அய்யத்தான் அசையத்தால்
அயர்வுண்ட அறவோரே

சூசைமாதவன் எங்ஙனம் சொன்னானெனில், ஐயத்தாலும், ஆசையாலும் மயங்கிநிற்கும் அறவோர்களே! பூவுலகத்தோரின் தீவினையைப்போக்கி மனிதர்யாவரும் வழுவாதுஉயிர்பிழைத்து என்றும் வாழ்வதற்கென அங்கே மனிதனாய்ப்பிறந்த மேலான பரமநாதன் உங்களுக்குஇன்பமான ஓர்செய்தியைச் சொல்வதற்கென்று இங்கே அவன்அனுப்பிய ஓர்தூது நான் என்றான்.

ஆயாக மறைவடிவாய்த்
தொக்(கு)இணைவெல் மாட்சிமையாள்
தாயாகக் கன்னியுமாய்த்
தாரணிமேல் அரி(து)ஈன்ற
சேயாக எம்இறையோன்
சென்று ஐயைந்(து) ஓராண்டாய்
தீயாக வருத்துவினை
தீர்த்திடுநாள் நண்ணியதே

வேதவடிவமாய்த் தூயமனதில் ஒப்பெல்லாங்கடந்த மாட்சியையுடையாள் கன்னியும் தாயுமாகப் பூவுலகில் அரிதேபெற்றெடுத்தமகனாக எமது ஆண்டவன்பிறந்து இருபத்தாறு வருடமாகி மனிதரைக்கொடுமையாக வருத்துகின்ற வினைகளைத் தீர்ப்பதற்குக் குறித்தநாள் கிட்டிவிட்டது என்றான்.

அன்னவட்கே மணத்துணையாய்
அன்னவள்ஆங்(கு) இனி(து)உயிர்த்த
மன்னவற்கே கைத்தாதை
வரம்உளனாய் ஈங்(கு)அடியேன்
நின்னவற்கே தூதுற்றேன்
இந்நாளும் சிறைநீங்கிப்
பின்னவற்கே வீட்டில்துணை
பெரிதுவப்பீர் இனிஎன்றான்

அந்தக் கன்னித்தாய்க்கே மணத்துணையாகவும், அவள் அங்கே இனிதுபெற்றெடுத்த நரதேவனுக்கே கைத்தாதையாகவும் வரம்பெற்றவனாய் இங்கே அவருக்குத்தானே தூதனாக அடியேன்வந்தேன். இனி இந்நாளிலே உங்கள்சிறை நீங்கியதன்மேல் அவருக்கு மோட்சத்தில் ஒருதுணைவராகநின்று மிகவும் களிகூர்ந்து வாழ்வீராக என்றான்.

(தொடரும்)

**நல்லூர் மீசாம்**

## தூதுபரப்பிய சிறுவர்

(முன்தொடர்ச்சி)

இந்தச்சிறிய உபதேசிமார்கூட்டமே போர்த்துக்காலுக்குப் புத்துயிர்கொடுத்தது. எமதுநாட்டில்......!!!

**சூம்பியகால்கள்:**—இந்தக் குடும்பத்திலுள்ள பிள்ளைகளுள் ஒருவன் மிகவும்ஆர்வத்துடன் ஞானோபதேசமும், மற்றும் லௌகீககல்வியும் கற்றுக்கொள்ள ஆத்திரப்பட்டான்.

என் தம்பி! இவ்வளவுஆத்திரம்? என்றார்கள் எமது "உபதேசிமார்"

"குருமார்இல்லாதஊரில் நான்ஒரு குருவாய்வரவேணும்; அதற்காகநான் கெதியாய்ப் படிக்கவேணும்; ஆத்துமாக்களை இரட்சிக்கவேணும்" என்றான்.

"ஆனால், உன்கால்கள் சூம்பிப்போய் இருக்கின்றனவே; அங்கக்குறைவானோர் குருமாராய் வருவதெப்படி?"

"அதைப்பற்றிக் காரியமில்லை. அது "ரோனி" சரிப்பண்ணுவார்.

ஆரப்பா "ரோனி"என்று தாயிடம் கேட்க, அது அர்ச். அந்தோனியாரைத்தான் "ரோனி"யென்று சொல்லிக்கொள்வர். அந்தச்சுத்தவாளனிடமிருந்து கேட்கிறதெல்லாம் பெற்றுக்கொள்வர். அச்சிறுவனின் நம்பிக்கை நிறைவேறியது. அவன்சூம்பியகால் குணப்படவும், குரு பதவியடையவும் பாக்கியம்பெற்றான்.

**அணையும் துணையும்:**—ஒருவர் பைத்தியகாரர் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையாக்கப்பட்டார். ஆனால் விறுவிறுக்கும் அவர்நரம்புகள் நிம்மதி அடையவில்லை, பேச்செல்லாம் மிச்சம்ஆர்வமானபேச்சு. செயல்கள் தீவிரமான செயல்கள். எல்லோரும் இந்தப் பைத்தியகாரனுக்கு என்னவேலையென்றார்கள். சாப்பாட்டுக்குவழியில்லை; பெண்சாதிபிள்ளைகள் நித்தம் பட்டினிபோன வருத்தம் திரும்ப வருமாப்போல இருந்தது. இச்சிறு உபதேசிமார் அவரைச் சிறியவேலை ஒன்றில் அமர்த்திச் சொற்பசம்பளம் கொடுத்து ஆதரித்துவரவே சிலகாலத்துள் அவர் குடும்பப்பொறுப்பேற்று நடத்தக்கூடியவரானார். இன்னொருவர் மிகவும்துட்டன். களவெடுப்பதும் சண்டையிடுவதுமே இவர்தொழில். எவ்வித பிரயாசையான வேலையுஞ் செய்ய எப்போதும் சம்மதமானாலும் இவரின் துட்டத்தனத்தை அறிந்தோர் இவரை வேலைக்குஏற்க மாட்டார்கள். இச்சிறுவரே தஞ்சமானார்கள்.

தமது ஞானத்தொண்டுடன் சரீரத்தின் அவசியங்களையும் கவனிக்க உதவியாய்இருந்ததென்ன? போர்த்துக்கால் தேசத்தில் அர்ச். அந்தோனியார்பத்தி மிகவும்பரம்பியிருந்தது. அர்ச். அந்தோனியார்பேரால் தருமஞ்செய்யும் பழக்கம் எல்லோருக்கும் இருந்தது. அவர்கள் இத்தருமப்பணங்களையே ஆதாரமாகக்கொண்டார்கள்.

எமதுமீசாமிலும் வறியோர், இருக்கக்குடிநிலமற்றோர், பசிபட்டினியால் வருந்துவோர், தொழிலற்றோர் அநேகர்உண்டே. இவ்வித சங்கடங்கள் அவர்களின் புதிய விசுவாசம் இருதயத்தில் தழைத்தோங்கப் பெருந்தடைகளாய் இருக்கின்றனவே! அர்ச். அந்தோனியாரும்அவர்பக்தரும் எமது பேரில் இரங்கமாட்டார்களா?

**தவறாது அனுகூலந்தரும் அர்ச். சவேரியாரின் வரப்பிரசாத நவநாள்:**— பங்குனி மாசம் 4-ந் திகதி தொடங்கியது. குறித்த அட்டவணைப்படி ஒவ்வொருபாடசாலையும்தாபனமும் நோவனைகளுக்குச் சமுகமாயிருந்தன. நாள்முழுவதும் தொண்டாற்றிய இளைப்பையும்பாராது எம்மை உற்சாகப்படுத்திய மாணவருக்கும், ஆசிரியருக்கும் நன்றிகூறுகிறோம். முதியோரின் நாளாந்தரிசனை எவருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது. நாள்தோறும் ஒருபெரியசுற்றுப்பிரகாரம்போல் பட்டணப்பகுதிகளிலிருந்துவந்தவர்களின்தொகை ஆச்சரியத்துக்குரியதாய் இருந்தது. கடைசிநாள்சுற்றுப்பிரகாரமன்று சனத்தொகையாலும், பத்தியருட்சியாலும் எம்மத்தியில் உள்ளோரிடையே மறத்தற்கரிய மனப்பதிவை உண்டாக்கினார்கள். தேவன் இவர்களை ஆசீர்வதிப்பாராக. இப்பெருந்தொகையானோர் இந்தநவநாட்களில் எமது உபகாரிகளுக்காகத் தினமும் செய்த மன்றாட்டுகளே எமதுஉபகாரிகளுக்கு நாம்செய்யக்கூடியகைம்மாறு.

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

எனது விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.
வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

## கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தர்

இந்தமகுடநாமத்தோடு மட்டக்களப்பு அர்ச். சூசையப்பர் அநாதர் அச்சியந்திரசாலையில் வெளியிடப்பட்டிருக்கும் புஸ்தகம், தமிழ்சிரேஷ்ட பாடசாலை மாணவர்க்கு ஏற்றவகையில் வகுத்தும், தொகுத்தும், செம்பாகமானமுறையில் எழுதப்பட்டிருக்கின்றது. புஸ்தகத்தின் ஈற்றில் சுவிசேஷம்முழுவதிலுமுள்ள உவமைகளின் வியாக்கியானமும், புதுமைகளின் வரலாறுகளும் தெளிவாய்க் கொடுபட்டிருக்கின்றன.

வேண்டியவர் மேற்கூறிய அச்சியந்திரசாலை முகாமைக்காரனிடம் எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். தேம்பாவணியளவு நீட்டுப்போக்கான புஸ்தகம். 148 பக்கங்கள்கொண்டது. விலைபுத்தகம்ஒன்றுக்கு ரூபா 1.

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த இராக்கினியின்குன்றாதஅருட்கிருபையினாலும், அர்ச். சூசையப்பரின் அடைக்கலமான தயவினாலும், கோடிஅற்புதவரத்தனான அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினாலும், இன்னும் சந்தானாள், அர்ச். பிலோமினா, சந்தலூசியா, எனது காவல்சம்மனசானவர் சகல அர்ச்சியசிஷ்டவர்களினதும் மன்றாட்டினாலும், மூன்றுவருஷகாலமாகக் கண்பார்வைஇல்லாது என்செய்வேன் என்று கலங்கிக்கொண்டிருந்த யான் இப்போ எனது கண்பார்வையைஅடைந்துகொண்டேன். இதை எனது நேர்த்தியின்படி பிரசாஞ்செய்கின்றேன்.

ஊறணி சே. செலினப்பு

## பிரசுரம்

எனது மகனின் காய்ச்சல் தீரும்படி, பரிசுத்த தேவதாயாரையும் அர்ச். அந்தோனியாரையும் நேர்ந்துகொண்டதில் பூரணசுகம் கிடைத்தபடியால் நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

வங்காலை சி. ச. குருஸ்

## நன்றித்துதி

அர்ச். சூசைமாமுனிவரின் சுகிர்தமன்றாட்டினால் எங்கட்குக்கிடைத்த உபகாரசகாயங்கட்கு நன்றியாகவும் விசேஷமாக எனது மகவுக்கும் சோதரர்க்கும் சுகம் கிடைத்ததற்காகவும் துதிகூறுவதுடன் இன்னும் தேவகைத்தாதை திருச்சதனையிரந்து பூரணசுகத்தைப் பெற்றுத்தரும்படி பிரார்த்தித்து நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

மாதகல் S. S.

# சம்பத்திரிசியார்கல்லூரி நூற்றாண்டுவிழா

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரி தான்ஸ்தாபகமான நூற்றாண்டுவிழாவைச் சென்ற 10-ந்திகதி திங்கட்கிழமைமுதல் தேவதோத்திர வழிபாடுகளோடும், கவர்ச்சிகரமான ‘காணிவ’லோடும், பொருட்காட்சியோடும் மங்கலகரமாகக் கொண்டாடி வருகின்றது. பொருட்காட்சியானது, வடலங்காவின் பிரதமகத்தோலிக்க கல்விஸ்தாபனமாகிய இக்கல்லூரி கடந்த ஒருநூற்றாண்டிலும் அடைந்துகொண்ட எழுச்சியையும், வளர்ச்சியையும் பிரதிபலிப்பதாகின்றது.

இற்றைக்கு நூறுவருடங்களின்முன் அதாவது 1850-ம் ஆண்டுயாழ்ப்பாணமும்,கொழும்பும் இருவிக்காரியங்களாக வகுக்கப்பட்டதைத்தொடர்ந்து வந். பெற்றக்கினி ஆண்டவர் யாழ்ப்பாணம்வந்தார். வந்தபின் இங்குள்ளமக்களுக்கு ஆங்கிலகல்வி கற்பிக்கவேண்டிய ஆவசியகத்தைக் கண்டுணர்ந்தார். அதன் விளைவாகக் கிடுகால்வேய்ந்த சாலையொன்றில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சிறுவர்செமினரி எனும் கல்விச்சாலையின் அதிபராய் ஓர்ஐரிஷ்காரரான திரு. போய்அவர்கள் நியமனம்பெற்று வந்தார். அதிலே ஆங்கிலம் கற்பிக்க ஆரம்பித்தார். அப்போதுஅதில் ஐம்பதுமாணவரேசேர்ந்து படித்துவந்தனர். தற்போது பிரஸ்தாபம்பெற்று விளங்கும் சம்பத்திரிசியார்கல்லூரியின் ஆரம்பசரித்திரம் இதுவேஎன்க.

பத்துவருடங்கள் சென்றன. அதிகமான ஐரிஷ்காரர் வரத்தொடங்கினர். பிறதர் கொன்வே, பிறதர் டவுலிங் எனும் இருவரும் வந்துசேர்ந்து அதற்குப் புத்துயிர் அளித்தனர். இவர்களைத்தொடர்ந்து, அச்சமென்பதே அறியவராத குரவரான வண. லிற்றன்சுவாமியாரும், வண. மேர்பிசுவாமியாரும் வந்து மேலும்அதற்குப் பெருங்கீர்த்தியை வருவித்தனர். அப்போது பொருளாதாரவிஷயமாயும், சமூகவிஷயமாயும் ஆங்கிலகல்வியின் காத்திரமும், அதனைத் தங்கள்பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டுமென்று யாழ்ப்பாணமக்கள்கொண்ட ஆசை ஆத்திரமும் வெகுவாக அதிகரித்துவிட்டன. ஆங்கிலஉயர்தரக்கல்வி வேண்டுமென்ற கேள்வி அதிகரித்துக்கொண்டு வந்தது. அப்போது பிரித்தானியஆட்சி இங்கே ஐம்பதுவருடகாலம் நீடித்திருந்தும் ஆனதொன்றில்லை. வண. மேர்பி சுவாமியார் இதற்கான வழிவகை தேடினர். அதன்பேறாய் 1881-ம்ஆண்டு யாழ்ப்பாணச் சிறுவர் செமினரியானது தற்போதையநாமத்தைச் சூடுவதாயிற்று.

நவமானநாமம்புனைந்த சம்பத்திரிசியார்கல்லூரியின் முதல் அதிபராக வண. சிமைத்சுவாமியார் நியமனம்பெற்றார். இவர் முன்னே இலங்கைச்சிவிலுத்தியோகஸ்தர்களில் ஒருவராய் இருந்து குருவாகவந்தவர். இவரைத்தொடர்ந்து 1883-ம்ஆண்டு வண. சாள்ஸ்லிற்றன் சுவாமியார் கல்லூரிஅதிபர் பதவியை வகித்தனர். அதன்மேல் வண. பற்றிக் டன்சுவாமியார் அப்பதவியைவகித்தபோது சம்பத்திரிசியார்கல்லூரிக்கு ஓர்நவயுகம்—பிரஸ்தாபகாலம் உதயமானதெனலாம். அதனைப்பெரிதும் கீர்த்தியடையச்செய்த வண. ஜூல்ஸ் கொலின், சாள்ஸ் கொலின், உவீலர், சாள்ஸ்போ முதலாம் பிரபலகுரவர்களும், பிறரும் அக்காலத்திலேயே ஆசிரியர்களாக அதில் நியமனம்பெற்றனர். இந்தப்பேரான ஆசிரியர்களிடம் மாணவர்கள் உயர்தர கல்விபயின்று தங்கள் வித்தியாதிறமையாலும், உத்தியோகபதவிகளாலும், பிறவிசேஷங்களாலும் தங்கள்கல்லூரிக்குப் பெரும்புகழை ஈட்டிவரலானார்கள். 1906-ம் ஆண்டு வண. சாள்ஸ் மத்தியூஸ்சுவாமியவர்கள் இக்கல்லூரியின் அதிபராகவந்து முப்பதுவருடகாலமாகத் தம்முன்னோரின் பெருமைநிலைகுறையாது இதனைப் பிரக்யாதியுடன் நடத்திவரலாயினர். சுவாமியவர்களே தம்மைத்தொடர்ந்து கல்லூரியின் தலைவராகவிளங்கும் அதிவண. லோங்சுவாமியவர்களைக் கண்டடைந்தார். கல்லூரியின் இக்காலசரித்திரத்திலேபெரியகல்விமான்களான இவ்விருவரும் கல்லூரிக்கு ஆற்றியிருக்கும் அருந்தொண்டுகள் பொன்னட்சரங்களால்பொறிக்கப்படத்தக்கன.

சம்பத்திரிசியார்கல்லூரிதனது நூற்றாண்டுவிழாவைப் பெருமிதமாகக் கொண்டாடுகின்ற இச்சுபசந்தர்ப்பத்திலே, பொதுவாக யாழ்ப்பாண மக்களும், சிறப்பாகக் கத்தோலிக்கமக்களும் கடந்தநூறுவருடங்களிலும் அது தங்களுக்கும், தங்கள்முன்னோருக்கும் செய்திருக்கும் அரிய சமயசேவை, கல்விச்சேவை, சமூகசேவைகளை நன்குமதித்து இப்பெரிய நன்மைகளெல்லாம் அமலோற்பவமரியநாயகிசபைக் குருமாராலே — தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் மக்களின் ஆன்ம, சரீரசேவைக்கென அன்புடன் தியாகஞ்செய்த அக்குருமாராலே தங்களுக்குக் கிடைத்தனவென்பதை நன்குணர்ந்து அவர்கள் மட்டில் மிகுந்த நன்றிபாராட்டக் கடமைப்பட்டவர்கள்என்க.

சரித்திரப் பெருமைவாய்ந்த இந்தநூற்றாண்டுவிழா அன்று காலை 6-30 மணிக்குக் கல்லூரிச்சிற்றாலயத்திலே, கல்லூரியின் தலைசிறந்த ஆசிரியர்களில் ஒருவராய், சிலவருடகாலம் அதன் தலைவராய் விளங்கியிருந்த மகாவந். மேற்றிராணியாண்டவராலே, வண. எல். ஏ. சிங்கராயர், வண. ஜே. ஏ. மதுரநாயகம்எனும் குரவர்கள் தியாக்கோன், உபதியாக்கோனாகவும், மிஷன் விக்காரான அதிவண. எவ். எம். விசியன்சுவாமியவர்கள் துணைக்குரவராகவும் உதவிபுரியத் தேவதோத்திர பாடற்பூசை நிறைவேறியது. அத்தருணம் துணைமேற்றிராணியார் அதிவண. ஜி. ஏ. குருசாமி, வண. வில்லியம்யேசுதாசன்எனும்குரவர்களைக் கௌரவதியாக்கோன்மாராகக் கொண்டு சமூகமாயிருந்தார். இவர்களுடன் கல்லூரிப் பழையமாணவகுருப்பிரசாதிகளும், கண்டியைச்சேர்ந்த அதிவண. டி. ஜி. போபஸ்சுவாமிகளும். பாப்பரசரின் நைற்பட்டவர்த்தனர்களான செவாலியர் எல். ஜே. சூட்ஸ்அவர்களும், செவாலியர் எஸ்.அருளானந்தம்அவர்களும், பழைய, புதிய மாணவர்களும், ஆசிரியர்களும்,இவர்கள்குடும்பத்தினரும் அங்கு பெருந்திரளாகச் சமூகமாயிருந்தார்கள். பூசையின்போது வண. மத்தியூஸ் சுவாமியவர்கள் மனவருட்சிக்குரிய விதமாய் உணர்ச்சிததும்ப ஓர்பிரசங்கஞ்செய்தனர். பின்னர் “தெதேயும்” பாடித் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பெற்றதுடன் விழா சம்பந்தமான ஞானவைபவங்கள் நிறைவெய்தின.

உருமத்தின்போதுநூற்றாண்டுவிழாப் பெருவிருந்து சம்பிரமமாக நடைபெறலாயிற்று. நம் மேற்றிராணியாண்டவர் அதற்குத்தலைமைவகித்தனர். இவ்விருந்திலே கலந்துகொள்ளவிருந்த பிரதமர் டி. எஸ். சேனாநாயகஅவர்கள் சுகத்தாழ்வு காரணமாக வராமற்போக,அவரதுபுதல்வரும், கமத்தொழில் மந்திரியாருமான திரு. டட்லி சேனாநாயகஅவர்கள் தமதுதந்தையாரின்பதிலாளியாகஅவரிடமிருந்து ஓர்சுபசெய்தியுடன் வந்து பிரதமவிருந்தாடியாகச் சமூகமளித்து அச்செய்தியைப் பிரசித்தமாகப் படித்துக்காட்டினர். “சம்பத்திரிசியார்கல்லூரி போலும் கல்விச்சாலைகளை ஸ்தாபித்த மிஷனரிமார்கள் இல்லாவிடில் அத்துணைவிரைவிலே நமதுசுதந்தரத்தை நாம் அடைந்துகொள்ளக்கூடியவர்களாய் இருப்போமாஎன்று நான் சிலவேளைகளில் ஆச்சரியப்படத்தொடங்குகிறேன். இந்த மிஷனரிமாரின்செல்வாக்கும், அவர்கள் தங்கள் கல்விச்சாலைகளில் அளித்த கல்வியும் இந்தப்பலத்திலே நம்மைவைத்திருக்கப் பெரிதும் காரணமென்பதில் சந்தேகமில்லை”என்று பிரதமர் தமதுசெய்தியில் தெரிவித்திருந்தார்.

பிற்பகல் 6 மணிக்குப் பிரதமரின் புதல்வர் காணிவலையும், பொருட்காட்சியையும் திறந்துவைப்பதற்காகப் பெரியதெருவிலிருந்து அம்பாரிவைத்த ஓர் ஆனைமீதிவர்ந்து பெருந்திரளானோர் புடைசூழ வாத்தியவரிசைகளுடன் தீபாலங்காரமுற்று இந்திரலோகம்போன்றுதேசோமயமாய்விளங்கிய கல்லூரியின் காட்சிமைதானத்தை அடைந்து அங்குஉயர்மேடையில் இருமேற்றிராணிமார், பழைய, புதிய கல்லூரித்தலைவர்கள், மற்றும் பிரமுகர்களுடன் ஆசனத்தமர்ந்ததும் தலைவர் சுவாமியவர்கள் அவரை நல்வரவேற்றுநின்றார். அத்தருணம் வண. மத்தியூஸ் சுவாமியவர்களின் கல்வித்தொண்டைப் பாராட்டி அவர் கல்விபயின்ற ஒற்றாவா நகர சர்வகலாசாலை சன்மானித்த டக்றர் எனும் கலாபண்டிதபட்டம் நம் மேற்றிராணியாண்டவரால் அவருக்குவழங்கப்படலாயிற்று.

அவ்வேளை மந்திரியார் பேசியவிடத்து, சமயக்கல்வி ஊட்டுகின்ற சம்பத்திரிசியார் கல்லூரி போலும் கல்விஸ்தாபனங்களுக்கு இந்தநாடு ஆழ்ந்தநன்றிக்கடமைப்பாடு உடையதாயிருக்கிறதெனக்கூறி, வாழ்க்கையிலே சமயத்தின் அவசியத்தைப் பற்றி அழுத்தமாக எடுத்துக்கூறினர். தற்பரித்தியாகசேவைப்போக்கால் தூண்டப்பெற்று, இங்கே பிள்ளைகளுக்குக் கல்வியறிவூட்டுதற்கென்று தூரமான தேசங்களிலிருந்து வந்த றோமான்கத்தோலிக்க மிஷனரிமாருக்குப் புகழுரைகள் வழங்கினார். அதன்மேல் பொருட்காட்சிமைதானவாயிலை அடைந்துகாட்சியை ஆரம்பித்து காட்சிச்சாலைகள் பலவற்றையும் பார்வையிடலாயினர். தினமும் சாயங்காலவேளை பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டின் பல்வேறிடங்களிலுமிருந்து வந்து காட்சி பார்த்து, மும்மாடிகளைக்கொண்ட கல்லூரிப் புதியகட்டிடத்தைக்கண்ணுற்று ஆனந்தவசத்தராகச் செல்லுகின்றார்கள். தான் ஸ்தாபகமான கடந்த ஓர் நூற்றாண்டிலும் பத்திரிசியர்கல்லூரி எத்தனையோ பெருவிழாக்களையும், யூபிலிவிழாக்களையும் கண்டிருக்கிறது. ஆனால், அது இன்று கொண்டாடும்தனது நூற்றாண்டு விழாவைப்போலும் ஓர்பெருமிதவிழாவை எப்போதாவது கண்டிருக்கமாட்டாதென்பதிற் சந்தேகமில்லை.

◆

### காலநிலை

சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலே யாழ்ப்பாணக்குடாநாட்டின் சிலவிடங்களில் நல்லமழை பெய்திருக்கிறது. ஆனால், இவ்விடம் சிறுகப் பெய்யலாயிற்று. இரண்டொரு தினங்களாகக் காற்றுவீசுவதாலே வெப்பஞ்சற்றே சாந்தியாயிருக்கிறது.

### பர்மாஅரிசி வரத்து

சமீபத்திலே பர்மாவுடன் செய்யப்பட்டுள்ளஒப்பந்தத்தின்பயனாய் அடுத்து நிகழும் 1951-ம்ஆண்டு மாசிமாத இறுதிவரையிலே முதற்தரமான அரிக்கன் அரிசி இலங்கைக்குக் கிடைக்கவிருக்கிறது. அங்கேவாங்கப்பட்டுள்ள 3,50,000தொன் அரிசியிலே 2,50,000 தொன் அரிசியும் வருகிற ஆனிமாத இறுதியிலே கப்பலில்ஏற்றிக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

### காங்கேசன்துறை விபத்து

காங்கேசன்துறைக்கடலில் சென்ற வெள்ளிக்கிழமைபிற்பகல் சீமெந்து ஏற்றிய படகுஒன்றுமூழ்கி ஏறபட்ட விபத்திலே முன்னர்செய்திபரந்தவாறு அவ்வளவுதொகையானோர் சீவமோசம் அடையவில்லையெனத் தற்போது தெரியவருகிறது. பதினைந்துபையன்கள் காணாமற்போயினரென்று அப்போது செய்திபரக்கலாயிற்று. தற்போது நான்குபையன்களேசீவமோசம் அடைந்தார்களெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆரியதாச (வயசு 12), சிவக்கொழுந்து (18), இராமு அல்லது யோண் (22), ஆசீர்வாதம் (10) ஆகியோரே அந்நால்வருமாம்.

# தூதுசெல்லும் மாடப்புரு

[ தற்போது இந்தியாவின் பலவிடங்களிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்ற பாத்திமா செபமாலைநாயகியின் அற்புத திருச்சுரூபமானது, அடுத்துநிகழும் வைகாசிமாதம் 22-ந் திகதி இரத்மலானை விமானநிலையம் வந்துசேர்ந்து ஸ்ரீலங்காவில் தனது யாத்திரையைத் தொடக்கும். பாத்திமாமாதா லங்காவுக்கு விஜயஞ்செய்யவிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே யாழ்ப்பாணத்திலிருந்து மாடப்புருஒன்று அத்திருஅன்னையிடம் தூதுசெல்கின்றது ]

சோதி மணிப்புறவே தூயமரி நாயகிபால்
சேதிகொண்டோர் தூதுசெல்லத் தீவிரித்து வாராயோ!

ஆதிபா னார்யேசு அன்னையின்பால் நீ புறவே
சேதிஒன்று கொண்டேகச் சீக்கிரமாய் வாராயோ!

வாராயோ இங்கொருகால் வன்னப் புருவேநீ
ஏராயோ என்தூதை ஏற்றொருகால் ஏகாயோ

அன்னாளில் நோவா அனுப்பிவைத்த தூதான
பொன்னன மாடப் புருவே நீ வாராயோ!

நோவாவின் தூதாய நுண்மதிசேர் வெண்புறவே
பாவால் அழைத்தேன் பரிவாய் நீ வாராயோ!

பொற்புறவே நோவாவின் பேழை புகுந்தன்று
நற்செய்தி நீ உரைத்த ஞாபகமோ நீங்காதே!

தூதுசெல்வாய் நீபறந்து சொர்ணச் சிறகடித்து
மாதரசாள் மாமரிபால் மாடப் புருவே நீ

பாத்திமா அன்னை பவனிவரும் வீதிசென்று
காத்துநின்று சாற்று இந்தக் காதையெலாம் நீபுறவே!

வானுலக ராணி வலம்வருகும் வீதிசென்று
நானுரைக்குஞ் செய்தி நயந்துரைப்பாய் நீபுறவே

எம்பானார் அன்னை எழுந்தருளும் கோவில்சென்று
செம்பவள வாய்திறந்து செப்பிதனை நீபுறவே!

ஊர்வலமாய் மாதா உலாவிவரும் பாதைசென்று
ஆர்வமொடென் செய்தி அனைத்துமே சொல்புறவே!

தேர்இவர்ந்து செல்லும் திருவன்னை முன்சென்று
சீர்தாள் பணிந்தெனது செய்திசொல்வாய் நீபுறவே!

நேசமரி தாய்செல்லும் நெடுந்தெருவெல் லாஞ்சென்று
தாசன் உரைசெய்தி சாற்றிவா நீபுறவே!

விண்ணுலக ஈஸ்பரிதான் வீதிவரும் போதுசென்று
என்னரிய வாக்கு எடுத்தோது நீபுறவே!

கானகமும் கான்யாறும் காற்றாய்க் கடந்துசென்று
வானரசிக் கென்சொல் வழுத்துவாய் நீபுறவே

மாதாதனை அறியும் வகையாதோ என்றொருகால்
நீதான் வினவுவையேல் நில்இதோ சொல்லுகிறேன்

முன்னாளில் காட்சிதந்து மூன்றுஇடைப் பிள்ளைகட்குத்
தன்னாசிச் செய்தியொன்று தந்த பெருந்தகையாள்

கருணை விழியாள் ககனமது நோக்கும்
அருணன் உடையாள் அருளின் முகமுடையாள்

தாரகைகள் ஈராறு தயங்கும் மணிமுடியாள்
போரார் இளமதிதான் பிறங்கும் திருவடியாள்

மக்கள் புடைசூழ்ந்து மாலை மணிமணியாய்
மிக்கான பக்தியொடு விருப்பாக ஓதிநிற்பார்

கண்ணீர் உகுத்துநிற்பார் கையெடுத்துத் தாய்அன்பை
எண்ணி மனமுருகி எழுமுச் செறிந்திடுவார்

பாடிப் பதம்பணிவார் பாத்திமா அன்னைஎன்பார்
கூடித் துதிப்பார் குறிப்பாகக் கண்டுகொள்வாய்

கையிற்செப மாலை; கரங்கூப்பி அன்னைநிற்பாள்
ஐயமின்றி நீதான் அடையாளங் கண்டுகொள்வாய்

பத்திப் பரவசமாய்ப் பட்சநிறை பார்வையுமாய்
அத்தியந்த காட்சி அளித்திடுவாள் கண்டுகொள்வாய்

பக்தர்குழாம் சூழ்ந்து பகலோ டிரவிரவாய்
பக்திசெய்து துத்தியமே பாடுவார் கண்டுகொள்வாய்

பாத்திமா தாயென்று பாலகரும் தேமொழியால்
தோத்திரமே செய்து துதித்திடுவார் கண்டுகொள்வாய்

தங்கச் சிலைநிகரும் சந்திரனைத் தானிகரும்
செங்கிரணம் தங்கும் திருமேனி கண்டுகொள்வாய்

(தொடரும்)

## துண்டு துணுக்கு

'ஏப்றில்' என அறியப்படுவதாகிய சித்திரைமாதம் புராதனஉரோமரின் கலண்டரிலே இரண்டாவதுமாசமாய் இருந்துவந்தது. ஆனால், இன்றைய உலகின் கலண்டரில் நான்காவதுமாசமாய் இருந்துவருகிறது. ஆதிபூர்வமான அல்பான் அல்லது லத்தீன் கலண்டரில் இது 36 நாட்களைக்கொண்டிருந்தது. ஆனால், பிந்த 29 நாட்களாகக் குறைக்கப்பட்டது. கடைசியாக யூலியஸ்கலண்டரில் 30 நாட்கள் ஆக்கப்பெற்று அதேதொகையே இன்றைக்கும் நிலைபெற்றிருக்கிறது. 'ஏப்றில்' என்பது மரங்கள், செடிகள் துளிர்த்து புஷ்பங்கள்மலரும் காலம் என்ற அர்த்தத்தைக்கொண்ட லத்தீன்சொல்லிலிருந்து பிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

* * *

சீனாவிலே கம்யூனிஸ்தர் கிறீஸ்து சமயத்தையே துவேஷிப்போராய் இல்லை. புத்தசமயத்தையுமே களைந்துவிட முற்பட்டிருக்கின்றார்கள். சீனாவிலுள்ள நான்குலட்சம் சீனப் புத்த பிக்குகளும், கன்னியர்களும் தங்கள் மதசேவையைக் கைவிடும்படி சீனக் கம்யூனிஸ்தர்கள் செய்துவிட்டதாக நான்கிங்நகரிலுள்ள புத்தமடாலயத் தலைவர் தெரிவித்திருக்கின்றார். பிக்குகளில்பலர் இராணுவசேவை செய்வதாகவும், இன்னும்பலர் தொழிலாளர்களாக வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதாகவும், சிலபிக்குகள் நாடோடிவர்த்தகர்கள் ஆகிவிட்டதாகவும், சீனாவிலுள்ள புத்தகோவில்கள், மடாலயங்களில் அதிகமானவற்றைக் கம்யூனிஸ்தர் கைப்பற்றிவிட்டதாகவும் அவர்கூறுகின்றார்.

* * *

இங்கிலாந்திலும், வேல்ஸிலும் க்ஷயரோகம் வாரந்தோறும் 400 சனங்களைப் பலியெடுத்துக்கொண்டுவருகிறது. என்றாலும் பிரித்தானியவிஞ்ஞானிகள் இந்த க்ஷயரோகத்தைக் குணமாக்கவல்ல ஓர்மருந்தைக் கண்டுபிடிக்கத் தம்மால் ஆனதெல்லாம்செய்கிறார்களென்று சொல்வதற்கில்லை. ஆனால், அமெரிக்கஐக்கியதேச விஞ்ஞானிகள் "ஸ்றெப்ரோமிஸின்"என்று கண்டுபிடித்த மருந்தானது க்ஷயரோகக் கிருமிகளை ஓரளவிலே கொன்றழிப்பதில் வெற்றிபெற்றிருக்கின்றது. இந்தஅனுகூலத்தாலே அவர்கள்பெரிதும் உற்சாகம்அடைந்தவர்களாய்த் தாங்கள் இனிக்கண்டுபிடித்துச்செய்யும் அடுத்தமருந்து க்ஷயரோகத்துக்கு ஓர் முடிவு காணுமென்றுசொல்லி அதனைக்கண்டுபிடிக்கும்விஷயமாகத் தீவிர ஆராய்ச்சி நடத்திவருகின்றார்கள்.

* *

பிராஞ்சின்நான்காவதுகுடியரசாகிய தற்போதைய குடியரசின் பிரசாதிபதியாய் இருந்துவருகிறவர் எம். வின்சென்ற் ஓறியோஅவர்கள். ஓர் "பேக்கர்" அதாவது ஓர்அப்பக்காரனின் புதல்வர். இவர் துலூஸ்நகர சர்வகலாசாலையிலே சட்டசாஸ்திரம்கற்றுவரும்போது, பிறருக்குப் பாடங்கள் சொல்லிக்கொடுத்தே படிப்புச் சம்பளத்தைச் சரிப்படுத்திவந்தார். பின்னர்வழக்கறிஞராக அனுகூலத்துடன் வேலைபார்த்தார். இவர் பொருளாதாரநிபுணராகையால் 1936-ம் ஆண்டு பிராஞ்சிய நிதிமந்திரியாக நியமனம் பெற்றார். 1940-ம் ஆண்டு பிராஞ்சுதேசம் யுத்தத்தில் வீழ்ச்சியடைந்தபோது விச்சிஅரசாங்கத்தால் இவர் காவலில்வைக்கப்பட்டுப் பின்னர் சுகமுகாந்திரமாக விடுதலைசெய்யப்பெற்று லண்டன்நகருக்குத் தப்பியோடி ஜெனரல் தேகோலின் பிராஞ்சியஆலோசனை மகாசபையில் சேர்ந்துகொண்டார்.

* * *

இற்றைக்குப் 19வருடங்களின்முன்னர் பலூன்ஒன்றில் பூமியிலிருந்து 10 மைல்உயரத்துக்கெழுந்துபரமாணுமண்டலத்தில் முதன்முதலாகப்போய்ச்சேர்ந்த புறொபெசர் அகுஸ்ரே பிக்காட்அவர்கள் "வானத்துக்கும் பூமிக்கும்இடையில்" எனும் மகுடநாமத்துடன் எழுதியிருக்கும்புத்தகத்திலே சந்திரனுக்கு நடத்தும் பிரயாணத்தைச் சித்தாந்தமுறையில் இனிச்செய்யமுடியுமென அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார். ஆனால், அதிகம்சமீபகாலத்தில் அதனை நடத்திமுடிக்கலாமென அவர் நம்புவோராயில்லை. அங்கு பிரயாணஞ்செய்கிறவர்கள் றொக்கெற்கொண்டு இயக்கப்படும் விமானத்திலே, வாயு செல்லஇடமில்லாத அறையில் போகவேண்டுமென்றும், அந்தஅறையில் இருக்கும் கருவிகளும், விமானிகளும் நிறையில் ஒருதொன்வரையில் இருக்கவேண்டுமென்றும், அங்குசென்று பூமிக்குத்திரும்பிவர நானூறுதொன் எண்ணெய் கொண்டுசெல்லவேண்டுமென்றும் அவர்கூறுகின்றார்.

### திருயாத்திரைக் கன்னிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சகலத்திலும் தேவதாய்க்கும், அவள் திருக்குமாரனுக்கும் பிரியப்பட நடந்துவருவதென நிச்சயிக்கும் கிறீஸ்துவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தேவருகின்றது. உலகதிருயாத்திரை முடிந்தவுடன் இச்சுரூபம்— கிறீஸ்துவபக்தகோடிகள் செபித்துவாழ்த்திய இச்சுரூபம் நம் பாப்பரசருக்கு அன்பளிப்பாகச் சமர்ப்பிக்கப்படும்.

பாத்திமாமாதா — செபமாலை இராக்கினி—தம்செல்வக்குமாரனுடன் நம்மை ஆசீர்வதிப்பாளாக!

### புதுவருடப் பிறப்பு

இந்துக்களின் புதியவருடமாகிய விகிர்திவருடம் இன்றுவியாழக்கிழமை பிறக்கின்றது. சிங்களவருடப்பிறப்பும் இன்றேபிறந்திருக்கின்றது. இன்றும் நாளைவெள்ளிக்கிழமையும் அரசாங்க விடுமுறைநாட்களாகும்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயஆண்டவரின் இரக்கத்தாலும், கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரின் அநுக்கிரகத்தாலும், கன்னியும் வேதசாட்சியுமான அர்ச்.பிலோமினம்மாளின் சலுகையாலும், பரமபதம் அடைந்த வண. குருசோவிறதரின் நல்ஏவுதலாலும் நான்கேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன்.

ம. யோ.

—சுதந்திர அயர்லாந்தின் பிரசாதிபதியான திரு. ஓ கெல்லி அவர்களும், அவர்பாரியாரும் பரிசுத்தவருட திருயாத்திரையாய் இம்மாசம் 26-ந்திகதியன்று டபிளின்நகர் விமானநிலையத்திலிருந்து பிரயாணமாகவிருக்கின்றார்கள். தமதுஉத்தியோகபதவிகாலத்தில் அயர்லாந்துக்கு வெளியே செல்லும் முதல் ஐரிஷ்பிரசாதிபதி இவரே.

## நானா சங்கதிகள்

—பிந்திய புள்ளிவிபரப்படி, பிரித்தானிய புதியபாராளுமன்றத்திலுள்ள 625அங்கத்தவர்களிலும் தொழிற்கட்சி 315 பேரையும், 'கன்சர்வேற்றிவ்' எனப்படும் பரம்பரைக்கட்சி 297 பேரையும், லிபறல்கட்சி 9 பேரையும், ஐரிஷ்தேசியவாதிகள்கட்சி 2 பேரையும், சுயேச்சை லிபறல்கட்சி ஒருவரையும்கொண்டிருக்கின்றன.

—கம்யூனிஸ்த சீனாவிலே வீடுகள் கட்டச் செங்கற்பஞ்சம் உண்டாயிருப்பதால் அங்குள்ள புராதனப்பெருமை வாய்ந்த பெரியமதில் உடைக்கப்படுவதாகச் செய்திகிடைத்திருக்கிறது. சீனாவுள் கொள்ளைக்காரர்புகாமல் தடுப்பதற்காக இம்மதில் இருபது நூற்றாண்டுகளுக்குமுன் சின்—ஷி—மாங் என்ற சீனச்சக்கிரவர்த்தியால் எழுப்பப்பட்டது. இதன்நீளம் 1,400 மைல்

—இந்தியமாஜி கவர்னர்—ஜெனறல் திரு. சக்கிரவர்த்தி இராசகோபாலாச்சாரி அவர்களின் ஆயுள்காலம்வரை அவருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபா உபகாரச்சம்பளம் கொடுக்க வேண்டுமென இந்தியஅரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அவர் தம்பதவியிலிருந்து விலகிய தைமாதம் 26-ந் திகதிமுதல் அது அவருக்குக் கொடுக்கப்படும்.

—பரிசுத்தஸ்தானத்துக்கும், இந்தோனேஷிய புதியகுடியரசுக்குமிடையே இராஜீயஉறவு சமீபத்தில் உத்தியோகமுறையில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. வத்திக்கானிடமாக முதல் இந்தோனேஷிய பிரதிநிதியான சுகார்டோ விர்' பிறனொட்அவர்கள் பரிசுத்தஸ்தானத்தாலே அங்கீகரிக்கப்பெற்றிருக்கிறார்.

—அதிகம்வறிய பரிசுத்தவருடயாத்திரிகருக்கென றோமைநகரிலே விசேஷ தங்குநிலையம்ஒன்று தற்போது சித்தஞ்செய்யப்பட்டுவருகிறது. இது இந்தச் சித்திரைமாதம் பாவனைக்குத் திறந்துவைக்கப்படும். அர்ச். பிரான்சிஸ் நிலையம்என அறியப்படும் இது 400 யாத்திரிகரை அடக்கப்போதியது. இதில் ஒருநாளைக்கு ஒருவருக்கு ஏற்படுஞ்சகலசெலவும் 2சிலின்மாத்திரமே.

—சீனாவிலே மகாமோசமான ஓர் பஞ்சம்உண்டாய்ஏலவேதானே ஆயிரக்கணக்கானோர் இறந்துவிட்டதாகவும், அடுத்த அறுவடைகாலத்துக்குமுன் பலலட்சக்கணக்கானோர் மடியும்நிலையில் இருப்பதாகவும் செய்திகிடைத்திருக்கிறது அங்கு ஆன்வே மாகாணமே பஞ்சத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டு அதன் இரண்டு கோடிசனங்களில் 90 லட்சம்பேரும் பசியால்வாடுகின்றார்களாம்.

—வருகாலத்திலே புத்தகங்களை அச்சிடக் கடுதாசிகளைப் பாவிப்பதற்குப்பதில் நிக்கெல் பாவிக்கப்படுமெனப் பிரபல விஞ்ஞானியான திரு. தோமஸ் எடிசன் கூறுகின்றார். இரண்டரை அங்குல கனதியுள்ள நிக்கல்புத்தகமொன்று நாற்பதினாயிரம்பக்கங்களைக் கொண்டிருக்குமென அவர்தெரிவித்திருக்கின்றார்.

—இத்தாலியிலே சலேசியன்சபையாரால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகளைச்சேர்ந்த 1,800 பையன்கள் சென்றபங்குனிமாதம் 16-ந்திகதி றோமாபுரி அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலே பரிசுத்தபாப்பாசருக்கு இரு சிவப்புச் சப்பாத்துகளைத் தெட்சணை வைத்தார்கள். அவர் சாயந்தரவேளையிலே வத்திக்கான் தோட்டங்களில் உலாவிவரும்போது உபயோகிப்பதற்கென்று இவைகள் கொடுக்கப்பட்டன.

—பரிசுத்த ஸ்தானத்தினிடமாகப் பிரான்சிய அரசின் ஸ்தானிகராயிருந்துவருகிற விலாடிமீர் டி' ஓர்மெஸன்பிரபு பங்குனிமாசம் 13-ந்திகதி பிரான்சிய கத்தோலிக்கரின் பேரால்பாப்பாசருக்கு"ரெலிவிஷன்" எனப்படும் தூரப்பார்வைநிலையமொன்று வெகுமதிபண்ணலாயினர். அதனை உபயோகிக்கும் முறையை இஞ்சினீர்மார் அவருக்குக் காட்டிக்கொடுத்தனர்.

— இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, வேல்ஸ்எனும் மூன்றுநாடுகளிலுமுள்ள கத்தோலிக்கதாய்மாரின் ஐக்கியசங்கம் பரிசுத்தவருட ஞாபகார்த்தமாகப் பாப்பாசருக்கு ஓர்ஞானப்பூச்செண்டும், விசேஷவிதமாக நிர்மாணித்துச்செய்யப்படுகின்ற நற்கருணை வெள்ளிப்பாத்திரம்ஒன்றும் சமர்ப்பிக்கவிருக்கின்றது.

— ஸ்பெயினிலுள்ள உத்தியோகமுறையான தொழிற்பாடசாலைகள், தொழில்நுட்பபயிற்சிப்பாடசாலைகளுக்கெல்லாம் பாதுகாவலராக அர்ச். ஜோண் பொஸ்கோவை ஸ்பானியஅரசாங்கம் தெரிந்து "கெசற்"றிலே பிரசித்தஞ்செய்திருப்பதுடன் அவர் திருநாளை அப்பாடசாலைகளுக்கு ஓர்விடுமுறைநாளாகவும் ஆக்கி அதைக் கொண்டாடும்படியும் கற்பித்திருக்கின்றது.

—அப்போது பலஸ்தீனாவில் நடைபெற்ற யூத-அராபியயுத்தத்தாலே இஸ்றாயேல்எனப்படும் யூதநாட்டிலிருந்து தப்பியோடிய அகதிகளாய் ஆறுலட்சம்பேருக்குமேல் இருந்துவருகின்றார்கள். இவர்களில்அதிகமானோர் அராபியர்களே. இவர்கள்வசிக்க இல்லிடமின்றித் தற்போது சீரியா, லெபனான், யோர்தான்நாடுகளிலே அதிகமாகக் கூடாரங்களில் சஞ்சரித்துவருகின்றார்கள்.

—பிரஸ்தாபம்பெற்ற அமெரிக்கஐக்கியதேச ஸ்தானிகர்களில் ஒருவராய்ச் சென்றஒருவருடகாலமாகக் கனடா தேசஅரசினிடமாக இருந்துவந்த திரு. லோறென்ஸ் ஸ்ரீன்காட் அவர்கள் சென்ற 28-ந்திகதி ஒற்றாவாநகரிலிருந்து ஓர்விமானத்தில் பிரயாணஞ்செய்தபோது, விமானம் தீவிபத்துக்குள்ளாகவே, அவரும் வேறுநால்வரும் உயிரிழந்தார்கள்.

—சென்ற 1949-ம்ஆண்டிலே 11,000 யப்பானியருக்குமேல் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருப்பதாக வண. பற்றிக் ஓகொனர் சுவாமியார் வத்திக்கான்ரேடியோ மூலம் அறிவித்திருக்கின்றார். யுத்தத்துக்குமுன்னர் 11,000 யப்பானியர்கள் மனந்திரும்புவதாயிருந்தால் ஐந்துவருடங்களுக்குமேல் பிடிக்குமென அவர் கூறுகின்றார்.

—இந்தியாவிலே முன்னர் கொச்சி, பறோடாசமஸ்தானங்களின் திவானாக அதாவது பிரதமமந்திரியாக விளங்கியிருந்தவரான சேர் அல்பியன் இராஜ்குமார் பனேர்ஜி அவர்கள்மனந்திரும்பி ஓர்கத்தோலிக்கராகியிருக்கிறாரென அறிவிக்கப்படுகிறது.

—சுருட்டு,சிகறெற் புகைப்பதானது பசியின்மை, வயிற்றுப்புண், உக்கிர இரத்தஅமுக்கம், திறமைக்குறைவு ஆதியாம் பலதீமைகளையும் உண்டுபண்ணுவதாகப் பிரபல சுகாதாரநிபுணரான பேராசிரியர் குறுஎன்பார் கூறுகின்றார். ஆனால், அவரோ நாள்ஒன்றுக்கு 20 சிகறெற்றுகள் புகைத்துத் தள்ளுகின்றார்.

—1900-ம்ஆண்டு அதாவது இற்றைக்கு 50 வருடங்களின்முன் அமெரிக்கஐக்கியதேசத்திலே 102 குருமடங்கள் இருந்தவிடத்தில் தற்போது 401 குருமடங்கள் இருந்துவருகின்றன. அப்போது அங்கிருந்த பெரிய, சின்னக்குருமடங்களில் 4,954 குருத்துவமாணவர்கள் படித்தவிடத்திலே தற்போது 26,215 குருத்துமாணவர்கள் பயின்றுவருகின்றார்கள்.

—வசந்தகாலம் பிறந்ததோடு நாளுக்குநாள் அதிகமானயாத்திரிகர்கள் றோமாபுரியிற்போய்ச் சரிந்தவண்ணம்இருக்கின்றார்கள். சென்றபங்குனிமாத ஆரம்பத்திலே ஓர்நாள்இரவில் நாற்பதினாயிரம் யாத்திரிகர்கள் அந்நகரில் குழுமியிருந்ததாகச் செய்திகிடைத்திருக்கிறது.

# குழந்தை அழுவதேனோ?

## தாலாட்டுப்பாட்டின் கற்பனை

தாலாட்டுப் பாட்டுக்கேட்டும் உறங்காது அழும்பிள்ளையைத் தாய் என்ன செய்யமுடியும்? எவ்வாறு இசைப்பினும் பிள்ளைக்குப் பிரயோசனமில்லாதுவிடின் அன்னைசகிப்பாளா? அழுவதின் காரணத்தை அறியமுயலுகின்றாள். முயன்றுமென்? காரணம் வேண்டுமே. அக்காரணம் எதுவாக இருக்கலாம்? அது ஆரும் அடித்ததாக இருக்கலாம்என்ற எண்ணம் தாயின்மனதில் எழுகின்றது. எழுந்தும் என்ன? அதை அறியவேண்டுமே. அதற்காகத் தன்புத்திரனிடம் புலன்விசாரணைசெய்யத் திட்டமிடுகின்றாள். அதை நிறைவேற்றவே பாலனிடம் யார்அடித்தது என்று கேட்பதுபோல் பாட்டை இசைக்கின்றாள்:

“ஆச்சிஅடித்தாளோ—மகனே
உனக்கு
ஆமணக்கம் தண்டுவெட்டி”

ஆச்சி, பாட்டி, பேத்தி என்னும் மூன்றும் ஒரு பொருட்சொற்கள் என்பதே என்எண்ணம். ஆனால் தாயையே ஆச்சியென்று அழைக்கும் வழக்கமும் தமிழ்மக்களிடம உண்டு. இச்சந்தர்ப்பத்தில் தாயே பாட்டை இசைக்கும்போது “ஆச்சி”யென்பது அந்தத்தாய்க்குப் பொருந்தாது. ஆச்சியிடம் அதாவது பாட்டியிடம் கதை கேட்கும் வழக்கம் எங்கும் அருகிவிட்டாலும் கிராமப்பகுதிகளில் பாட்டியிடம் கேட்கும் பாலரின் கற்பனாசக்தி விருத்தியடைகின்றது என்பது கல்வி அறிஞரின்கருத்து.

பாட்டி கதைசொல்லிக் கொடுக்கின்றாள். பின்அதைப் பாலனிடம் கேட்கின்றாள். இவ்வழக்கம் எப்போதும் உள்ளதே. இது புதிதாகத் தோன்றியதன்று. பாலன்சொல்லாது (சிலதை) விடுவது இயல்புதானே. இதற்குப் பாட்டி தண்டனை கொடுப்பாள் அல்லவா? இது தாய்க்குத் தெரிந்ததல்ல. பாட்டிகொடுத்த தண்டனையாகிய அடியைச்சகிக்கமுடியாது பிள்ளை அழுகின்றதுபோலும் என்றுஎண்ணி அன்னை தன்அன்புருவான மகனிடம் கேட்கின்றாள்.

**********************

**என். தேவசகாயம்**

**********************

எப்படிக் கேட்கின்றாள்? எதனால் அடித்தாள் என்பதைமறைத்து, “ஆமணக்கம் தண்டாலே” ஆச்சி அடித்தாளா என்றுகேட்கின்றாள். “ஆமணக்கு” என்னும் மரத்தின் தன்மையைச் சிலர் அறியாதிருக்கலாம். “காயமில்லா அடிக்கு ஆமணக்கம் கம்பு” என்று கூறும்வழக்கம் இங்குண்டு. எவ்வாறு அடிப்பினும் காயம்காட்டாது. மேற்தோலில் ஒருதீமையும் ஏற்படாது. வீங்குவதும் குறைவாகும். இதை அன்னை எவ்வளவிற்கு உணர்ந்திருக்கின்றாள் என்பது எம்கற்பனைத்திறனைச சிறிதுதூண்டினால்தான் தெரியும். அன்றியும்தாய், பாட்டி வேறு தடிகளாலும் அடித்ததாகக் கற்பனைபண்ணும் பாக்களையும் வரிசையாகக் கூறுகின்றாள்:—

“பேத்தி அடித்தாளோ—மகனே
உனக்குப்
பிரண்டம் கொழுந்தாலே”

பேத்தி பிரண்டம்கொழுந்தால் அடித்தாளோ?வென்று கேட்கின்றாள். பிரண்டம் கொழுந்தால் அடித்தால் நோவும், காயமும்கூடக் காணப்படாது. கொழுந்தென்பது தண்டு முற்றாதநேரம் வழங்கப்படும் பெயராகும். பிரண்டையின் கொழுந்து கறிசமைக்க எடுப்பதென்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் தாயின் மூளை அதிகம் வேலைசெய்துகொண்டிருப்பதினால், அவளை அறியாமலே பாக்கள் நீரோட்டம்போன்று வந்துகொண்டிருக்கின்றன.

“பாட்டி அடித்தாளோ—மகனே
உனக்குப்
பால்வார்க்கும் கையாலே”

என்று கூறுகின்றாள். இதில் தாய் ஒருபெரிய உண்மையைப் பொதிந்துவிட்டாள். எம்நாட்டில் தாய்ப்பாலன்றிப் பசுப்பால் அல்லது புட்டிப்பாலும் கொடுக்கும்வழக்கம் உண்டு. தாய்ப்பால் கொடுப்பதாயின் பாட்டியால் வார்க்கவேண்டிய அவசியமில்லை. பசுப்பால்அன்றி வேறுபால் கொடுப்பினும் பாட்டி பால்வார்க்கவேண்டிய சந்தர்ப்பம்ஏற்படாது. பிள்ளை அழுதுகொண்டிருக்கின்றது. அன்னை பிள்ளையை அரவணைக்கின்றாள். அழுகை நின்றபாடில்லை. பால் கொடுக்கவேண்டிய நேரம். ஆனால் அடுக்களை சென்று பாலைப்பாத்திரத்துள் வார்க்கமுடியாத நிலையில் தாய் இருக்கின்றாள். இவ்வேலையைச் செய்பவள் இத்தருணத்தில் பாட்டியே. பாலை எதனால் பாட்டி வார்க்கின்றாள்? கையினால். இக்காரணங்களையிட்டே தாய் “பாட்டி பால் வார்க்கும் கையால் அடித்தாளோ” என்ற உண்மை எமக்குத்தெரிகிறதல்லவா? பாட்டி அடிக்கவில்லை. வீட்டில் வேறுயார் உண்டு பாட்டியைவிட. தன் தமையனின் மகளே வீட்டில்இருக்கின்றாள். இவள் தன் புத்திரனுக்கு முறைக்கு “மச்சாள்” இதனால் கீழ்வரும் கவியைப்பாடுகின்றாள்:—

“மச்சாள் அடித்தாளோ—மகனே
உனக்கு
மாதாளந் தண்டாலே”

மாதாளம்பழம் மருந்துக்கு எடுப்பார்கள். அன்றியும் அது அருமையானது. அதனால் அது பெருமையுடையதென்பது என்று நாம் அறியவேண்டும். இம்மாதாளமரத்தின் தண்டினால் அடித்துவிட்டாளாஎன்று கேட்கின்றாள்.

இதினால் பயனில்லை. பிள்ளை ஒருபதிலும் கூறவில்லை. ஆதலினால் வேறுயாராவது அடித்தால் கூறும்படி கேட்கின்றாள்.

“ஆரடித்து நீரழுதீர்—மகனே நீ
அடித்தவரார் சொல்லியழு”

ஒரு சிறுபொழுது தன்பிள்ளை அழுதால்கூடத் தாய் பொறுக்கமாட்டாள். நெடுநேரம் பிள்ளைஅழுதால தாய் சகிப்பாளா? இதனால் தாயின்மனம் கசிகின்றது. முன்கூறியவர்கள் அடியாதுவிட்டால் வேறுயாராகிலும் அடித்திருந்தால் சொல்லிவிட்டு அழு என்று பிள்ளையை வேண்டுகின்றாள். என்செய்வாள் பாவம். இதற்குவழி என்னவென்று யோசிக்கின்றாள். யோசித்து ஒருவழியும் கண்டுபிடித்துவிட்டாள். ஏதும்சாப்பிடக்கூடிய உணவு கொடுத்தால் பிள்ளை அழுகையைநிறுத்தும் என்றெண்ணி,

“வாழைப்பழம் தரட்டோ
—மகனே உனக்கு
வாய்க்கினிய தேன் தரட்டோ”

என்று பாடுகின்றாள். இவற்றில் எதையாவது கொடுத்தால் பிள்ளை தன் அழுகையை நிறுத்துமென்ற எண்ணம் போலும். வாழைப்பழத்தைத் தாய் மகனுக்குக்கொடுக்க நினைக்கின்றாள். ஏன்? என்றகேள்வி எழவேண்டும். கனிகள் பலவுண்டு. அதில் வாழைப்பழத்தைத் தாய்ஏன்எடுத்தாள். அதில் காரணமுண்டுதான். முக்கனிகளில் முதலிடம்வகிப்பது வாழைப்பழம். அது பிள்ளைகட்குத் தீங்குசெய்யாத கனி என்று தாய் அறிந்திருக்கிறாள். அல்லது அவள் எவ்வாறு வாழைப்பழத்தைத் தன்மகனுக்குத் தெரியமுடியும்?

“வாய்க்கினிய தேன்” என்பதும் நோக்கத்தக்கது. “தேன்” என்று சொல்லும் அன்னையின்வாயே இனிக்கிறதுபோன்று எமக்குத் தோன்றவில்லையா? இதையிட்டு அன்னை எவ்வளவு தத்ரூபமாகக் கூறுகின்றாள். இனிமை

( தொடர்ச்சி 8-ம்பக்கம் )

# சுதேச வர்த்தமானம்

## கல்லூரி விடுமுறை

சம்பத்திரிசியார் கல்லூரியின் ஈஸ்றர் விடுமுறை சென்ற 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாயிற்று. விடுமுறை முடிந்து மறுபடி கல்லூரி வருகிற வைகாசிமாதம் 16-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

## தினமும் யாத்திரைவசதி

மருதமடுத் திருப்பதிக்குச் செல்லும் யாத்திரிகரின் வசதியைக்கோரி யாழ்ப்பாணத்து வடமாகாணப் பிரயாண பஸ் கம்பெனியானது, அப்பதிக்கு நாளாந்த பஸ்பிரயாணசேவை ஒன்றை இம்மாசம் 3-ந் திகதி முதல் ஆரம்பித்திருக்கிறது. மன்னாரிலிருந்து புறப்படுகிற பஸ்கள் றெயின் வழியாக வந்துசேருகின்றயாத்திரிகரை ஏற்றிக்கொண்டு பிற்பகல் 5 மணியளவில் மருதமடுபோய்ச்சேருகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில்தானும் அப்பதியில் காலைப்பூசை காணக்கூடிய வகையில் யாத்திரிகர் போய்ச்சேரத்தக்கதாகப் பஸ்பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

## றோமாபுரித் திருயாத்திரை

பரிசுத்தவருடத்து இலங்கைத் தேசீய திருயாத்திரிகர்களை ஏற்றிச் செல்லவிருந்த 'சிறேனியா' எனும் கப்பல் ஒருநாள் பிந்திவந்தமையால் பங்குனிமாதம் 31-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவே அவர்களை ஏற்றிக்கொண்டு அது பிரயாணப்படலாயிற்று. அன்று பிற்பகல் அவர்களை வழியனுப்புவதற்காகக் கொழும்புத் துறைமுகப் பாலத்தின் மேற்தட்டிலே அவர்களின் உறவினரும், சிநேகிதர்களுமாகப் பெருந்திரளானோர் சமுகங்கொடுத்திருந்தார்கள். இதுவரை இத்தகைய ஓர்பெருஞ்சனக்கூட்டம் அங்கு காணப்பட்டதில்லையாம். பாலத்திற்குவெளியே குதிரைப்படைப் பொலிசர் வண்டிப் போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்தினர். பாலத்தின் கீழ்த்தட்டிலே பிரவேசப் பகுதியைப் பொலிசார் காவல் செய்தனர். 253 யாத்திரிகர்களில் புத்தசமயத்தவர் ஒருவரும், 20 பேருக்கு மேற்பட்ட புரொட்டெஸ்தாந்த கிறீஸ்தவர்களும்உட்பட வைத்தியர்களும், வழக்கறிஞர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், ஆசிரியர்களும், கன்னியாஸ்திரிமாரும், கிறிஸ்தியன் பிறதரும், குருமாருமாகப் பலரும் அடங்கியிருக்கின்றார்கள். பன்னிரு குருமாருள் தூத்துக்குடிமேற்றிராசனத்தைச் சேர்ந்த நான்குகுருமாரும் அடங்கியுள்ளார்கள். ஆஸ்திறேலியாவிலிருந்து றோமாபுரிசெல்லும் மற்றோர் யாத்திரிகர்கோஷ்டியும் இக்கப்பலிலே செல்லுகின்றது.

## குருப்பட்டாபிஷேகம்

கண்டி மேற்றிராசனத்திலே அர்ச். ஆசீர்வாதப்பர் சபையைச்சேர்ந்தவரும், தற்போது றோமாபுரியிலே உயர்ந்த வேதசாஸ்திரங்கள் கற்றுவருகிறவருமான வண. டி. புறூனோ டேனியல் பிறதர் சென்ற 8-ந் திகதி பெரியசனிக்கிழமையன்று றோமாபுரி, அர்ச். லத்தறன் அருளப்பர் மகாஆலயத்திலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். வேதசாஸ்திரமும், வேதசங்கீதமும் பயின்றுவருமாறு இவர் சென்றவருடம் றோமாபுரிக்கு அனுப்பிவைக்கப்பெற்றார். இவர் சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர்களில் ஒருவர்.

## சிலாப விக்கார் ஜெனறல்

சிலாபமேற்றிராசன விக்கார் ஜெனறலான மிகவண. மிக்கேல் பெறேரா சுவாமியவர்கள் றோமாபுரிக்கு யாத்திரைபோகின்றமையால், அவரிடமாக அம்மேற்றிராசன ஐக்றிங் விக்கார் ஜெனறலாக மிகவண. றோலண்ட் பெறேரா சுவாமியவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். சிலாப மேற்றிராசனக்கோவிலின் குருசிரேஷ்டரான இவர் சென்ற மார்கழிமாதம் தமது குருத்துவ வெள்ளியூபிலியைக் கொண்டாடினார்.

## சீமேந்துச் செய்கை

காங்கேசன்துறைப் புதிய சீமெந்துத்தொழிற்சாலையிலே வருகிற ஆடிமாச நடுக்கூற்றிலிருந்து சீமெந்து செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் கைத்தொழில்மந்திரி காரியாலயம் பூர்த்திசெய்திருக்கின்றது. ஆரம்பத்திலே அதில் வாரம்ஒன்றுக்கு 2,000 தொன் வீதம் வருடம் 1,05,000 தொன் சீமெந்து செய்வதற்கான திட்டம்செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சீமெந்து பிரித்தானிய சீமெந்துக்குச் சமமாயிருக்கும். அதற்கான உத்தரவாதம் தொழிற்சாலையினால் அளிக்கப்படவிருக்கிறது. மொத்த விற்பனை முறையைக்கொண்டே இந்தச்சீமெந்து விற்பனை நடைபெறவேண்டுமெனக் கைத்தொழில்மந்திரியார் தீர்மானித்திருக்கின்றார். அதன்விலை விரைவிலே நிர்ணயிக்கப்படவிருக்கிறது.

## நகரசங்க கம்மிஷனர்

ஓர் பரீஸ்றரும், சாவகச்சேரியிலே முடிக்குரிய அப்புக்காத்தாய் இருந்து வருகிறவருமான திரு. கே. சண்முகம் அவர்கள் யாழ்ப்பாணநகரசங்க கம்மிஷனரின் நிரந்தரபதவிக்கு நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் பிரஸ்தாபம்பெற்ற முதலியார் காராளபிள்ளை அவர்களின் புதல்வர். யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை இவரே முகாமைவகித்து நடத்திவருகின்றார். இவருக்கு வயசு 43. இம்மாதம் 5-ந் திகதியன்று இவர் தமது உத்தியோகபதவியைக் கையேற்றிருக்கின்றார்.

## புதிய சிற்றாலயம்

மகோனவிலே அர்ச். பிரான்சீஸ் அசீஸியாரின் நவசந்நியாசமடத்துடன் சேர்ந்ததாய்ப் புதிதாகக் கட்டப்பெற்ற சிற்றாலயம் சென்ற பங்குனிமாதம் 18-ந் திகதி கொழும்பு அதிமேற்றிராணியாரால் ஆசீர்வதித்துப் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சம்பவம் முன்னர் நம்பத்திரிகையில் வெளிவரலாயிற்று. இப்புதிய அழகான சிற்றாலயத்தைக் கட்டுவதற்குத்தேவையான முழுப்பணத்தையும் நன்கொடையாக உபகரித்தவர் ஓர் கத்தோலிக்க செனற்றரான டக்றர் எம். ஜி. பெறேரா அவர்களே. அது பிரதிஷ்டைசெய்யப்பெற்றபோது இவரும், இவர் பாரியாரும் அங்கு சமுகமாயிருந்தார்கள்.

## கொழும்பு மத்திய தொகுதி

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையிலே காலியாயிருக்கும் கொழும்புநகர் மத்தியதொகுதி ஸ்தானத்துக்கு அபேட்சகர்களாய் நால்வர் வெளி கொண்டு சென்ற 1-ந் திகதி சனிக்கிழமை தங்கள் நியமனபத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இவர்களின் நாமங்கள் வருமாறு: (1) டக்றர் எம். சி. எம். கலீல் (ஐக்கிய தேசீயக் கட்சி), (2) திருமதி அய்ஷாறூவ் (சுயேச்சை), (3) திரு. எம். எஸ். அபூபாகிர் (சமசமாஜ கட்சி), (4) டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்க (கம்யூனிஸ்தகட்சி). தேர்தல் அடுத்த வைகாசிமாதம் 6-ந் திகதி நடந்தேறவிருக்கிறது.

## யப்பானிய சாமான்கள்

யப்பானிய சாமான்கள் இன்னுஞ் சிலமாதங்களிலே ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சாமான்களுடன் இலங்கையிலே பலமாகப் போட்டியிடவிருக்கின்றன. கட்டுப்பாடானஓர் அளவிலே சென்ற பங்குனி மாதஇறுதியோடு யப்பானிலிருந்து இஷ்டம்போலச் சாமான்களை இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்பட்டிருப்பதாலே அவைகள் வருகிற ஆடிமாத முதல் இலங்கையில் ஏராளமாக வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. யப்பானியசாமான்களை இறக்குமதி செய்வதானது தற்சமயம் இலங்கையரான இறக்குமதியாளருக்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ஏலவேதானே அங்கிருந்து புடவைகள் முதல் சைக்கிள்கள்வரையில் பலவித சாமான்களையும் தொகையாக இறக்குமதிசெய்திருக்கின்றார்கள்.

## அதிகமான பர்மா அரிசி

பர்மாவிலே புதிதாகவிளைந்த நெல்லைக்கொண்டு இலங்கைக்கு 2,10,000 தொன் அரிசி விற்பனைசெய்தற்கான ஒப்பந்தம்ஒன்றுக்குச் சென்ற ஞாயிற்றுக்கிழமை றங்கூனிலே கையொப்பம் இடப்பட்டிருக்கிறது. இத்துடன் பழையநெல்லைக்கொண்டு ஏலவேஇலங்கைக்கு விற்பனைசெய்யப்பட்டுள்ள 1,40,000 தொன் அரிசியையும் சேர்க்குமிடத்து நிகழும் 1950-ம் ஆண்டிலே இலங்கைக்கென்று மொத்தமாக விற்கப்பட்டுள்ள அரிசி 3,50,000 தொன்னாகும். இதன்விலை ஏறக்குறைய 18 கோடிரூபாவுக்கு மேலாகுமென அறிவிக்கப்படுகிறது. தற்போது இலங்கையிலே கைவசமுள்ள அரிசி வருகிறஆனிமாதம்வரையில்தான் போதியது. பர்மாவிலிருந்து இனிமேல் கிடைக்கவிருக்கும்அரிசி அதிகம் நல்ல இனமானது. இலங்கை சென்றவருடம் பர்மாவிலிருந்து 2,72,092 தொன் அரிசியே இறக்குமதிசெய்தது. ஆனால், இவ்வருடம் இறக்குமதிசெய்யவிருப்பது 3,50,000 தொன.

## மனம்மாறிய கம்யூனிஸ்தர்

வெள்ளவத்தை அர்ச். லவுறேஞ்சியாரின் கோவிலிலே ஓர் வாரமாகத் திருமீட்பர்சபைக் குருமாரால் அவ்விசாரணைப்பங்குக் கத்தோலிக்கமக்களுக்குப் போதிக்கப்பட்டுவந்த ஞானஒடுக்கம் திருப்பாடுகளின் ஞாயிறன்று முடிவடையலாயிற்று. அன்றுகாலை திவ்வியபூசை நிறைவேற்றிய சுவாமியார் அதன்முடிவிலே, அவ்விசாரணைப்பங்கைச் சேர்ந்த இருவர் தங்கள் கையொப்பம் இட்டு அனுப்பிய இருபத்திரங்களைப் பிரசித்தமாக வாசித்துக்காட்டினர். அவற்றிலே அவ்விருவரும் தாங்கள் கம்யூனிஸ்த, அதாவது பொதுஉடைமை வாதத்தை ஆதரித்ததாகவும், ஆனால் பின்னர் தங்கள் பிழைகளைக் கண்டுணர்ந்ததும் கம்யூனிஸத்துடன் இனிமேல் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்வதை நிறுத்திவிட்டதாகவும், அதனால் மன்னிப்புக்கேட்பதாகவும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்கள்.

## ஆஸ்பத்திரி இரத்தவங்கி

கொழும்பிலுள்ள அரசினர் பெரிய ஆஸ்பத்திரி இரத்தவங்கியிலே சீவஅபாயமான நிலையில் இருப்பாருக்குப் புத்துயிர் அளிப்பதற்கென்று நூற்றுக்கணக்கான இரத்தோபகாரிகளின் இரத்தம் சேமித்துவைக்கப்பட்டிருக்கிறது. தினமும் எட்டுமுதல் பத்துஇரத்தோபகாரிகள்சென்று இந்த இரத்தவங்கிக்கென்று தங்கள் இரத்தத்தில் ஒரு பைந்து உதவிப்போகின்றார்கள். சென்றமாதத்தில் 134 இரத்தோபகாரிகள்சென்று மற்றவர்கள் சீவிப்பதற்கென்று தங்கள் இரத்தத்தை உதவியிருக்கின்றார்கள். இவர்களிலே பத்துப்பேர்வரையில் பத்துரூபா வெகுமானத்தைப்பெறமறுத்துவிட்டார்கள். இந்தஇரத்தமெல்லாம் எங்கே போகின்றது? பிரதானமாக ஆஸ்பத்திரிச் சத்திரவைத்திய வாட்டுகளுக்கே போகிறது. அங்கே சத்திரவைத்தியத்தின் போது தங்கள் இரத்தத்தை இழந்த நோயாளிகளுக்கு அது செலுத்தப்படுகிறது. பின்னர் பிறரின் இரத்தம் வேண்டியிருக்கும் பிரசவித்த தாய்மாருக்கு அது உபயோகமாகின்றது.

## மதுவிலக்கும் பெண்களும்

கள், சாராயத்தவறணைகள், குடிவகைச்சாய்ப்புகளை நீக்கும் விஷயமாய்ச் சனசம்மதிகேட்கும்போது பெண்களும் தங்கள் வாக்குரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அனுமதியளிக்கவேண்டுமென்பதே அரசினரின் கருத்தாகுமென்று செனற்சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# திரிதினத்தில் உயிர்த்திட்டானை வணங்காநாள் வாளாநாளே !

( கவிஞர் தம்பிமுத்து )

( பண்-யாழ்முறி—மேகராகக்குறிஞ்சி )

ஆதிமடக் கொடியுமவ ளன்பனு மமலன்
அறைமுறை நெறிதவிர்த் தாகாமியஞ் செய்ததால்
மேதினி மீதினிலே பவம்மேவ அவலுடன்
விதிப்படி சிறப்புறு மெல்லியல் தன்னிடமாய்
நீதிநிறை வேறவந்து நீண்டசிலுவையிலே
நெறிமுறை யுறவுயிர் நீத்தடி யோர்க்குற்ற
கோதினை நீக்கியே யன்புகூர்ந்த கோமானே
குறையற நெறியுறக் கூட்டிரட் சிப்பாயே

( திருத்தாண்டகம் )

I

தொடக்கமுடி வில்லாத தூயன்றன்னைத்
திட்டருளத் தமராத மட்டிலலானைக்
கடக்கரிய முதுபவத்தைக் கடத்திதற்குக்
கருதியே திருவிரக்கங் காட்டினானை
அடக்கவொடுக் கந்தாழ்ச்சி பொறுமைமேவி
அம்பரத்தை விட்டிந்த வவனிமீது
மடக்கொடிபால் வந்துதித்த மகிமையானை
வணங்காத நாளெல்லாம் வாளாநாளே

II

மன்னுயிரை யீடேற்ற வந்திட்டானை
மாண்புடைய வற்புதங்கள் வழங்கினானைத்
தன்னுயிரைப் பலிகொடுத்த தயாளத்தானைத்
தத்துவவுத் தமபோதஞ் சாற்றினானை
மின்னுபர கதிவழிக்கு நடத்துவானை
மிக்கதிரு மறைவிளக்கும் விமலன்றன்னை
என்னுயிருக் குயிரான எம்பிரானை
என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே !

III

விரித்தானைத் திருமறையை மிடியாபாவம்
விலக்கிடமுண் முடியதனை விரும்பிச்சென்னி
தரித்தானை யுலகசுக போகமெல்லாந்
தவிர்த்தானை நமக்காகத் தருவைத்தோண்மேல்
பரித்தானைச் சிரித்தாரைக் கடிந்திடாமல்
பாதகருக் காயிரந்து சிலுவைமீதில்
மரித்தானை திரிதினத்தி லுயிர்த்திட்டானை
வணங்காத நாளெல்லாம் வாளாநாளே

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல்
தரும சபை
யாழ்ப்பாணம்

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

நரக்களி, மாம்புரி:—திருஇருதய நாதரினதும், அர்ச்சியசிஷ்டர்களான பதுவை அந்தோனியார், செபஸ்தியார், செபமாலை நாயகியினதும் கிருபாகடாட்சத்தினலே யான்கேட்ட இரு விசேஷ மன்றாட்டங்கள் காலாகாலத்தில் கிடைக்கப்பெற்றதினலே, நேர்த்தியின்படி ரூபா 5 தரும அப்பத்திற்குக் காணிக்கையாக அனுப்பிவைப்பதுடன், இவ்வற்புதத்தையும் பிரசுரிக்கின்றேன். கர்த்தரினதும், இவ்வர்ச்சியசிஷ்டர்களினதும் நாமங்கள் என்றும் புகழப்படுவதாக!

B. Simeon Pillai
Teacher

சூராவத்தை:— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடம் நான் கேட்ட மன்றாட்டு அனுகூலமானதால், நன்றியாக அவரது ஏழைகளின் தரும அப்பத்துக்கு ரூபா 5 அனுப்புகின்றேன்.

Mrs. M. P. R.

யாழ்ப்பாணம்:— பரிசுத்த பாத்திமா நாயகியின் அனுக்கிரகத்தினலும், அர்ச். ஆரோக்கியநாதரின் மன்றாட்டத்தாலும் எனக்குண்டானவருத்தம் பூரண சுகமானது. இவர்களின் நாமங்கள் என்றென்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி ஏழைகளின் தருமஅப்பத்துக்கு ரூபா ஒன்று அனுப்பியிருக்கிறேன். J. P.

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

மவுண்ற் லவீனியா: மேரி பிரான்சீஸ் 2-00— மலாயா: எஸ். யோசெவ் 3-30 — பொகவந்தலாவ: எஸ். சன்ரியாகோ 1-00— முருங்கன்: பி. ஜே. சிறில் 3-00 — கொட்டகல: மிசெஸ் ஏ. ஜே. குரூஸ் 2-00— மாதகல்: ம. ஜோண்பிள்ளை 1-00 — முருங்கன்: ம. செபஸ்தியான் 2-00 — மஸ்கேலியா: எம். வஸ்தியாம்பிள்ளை 6-00, பி. வி. சில்வேஸ்றர் 2-00— செட்டிகுளம்: வ. சவிரிமுத்து 20-00— உடப்புசலாவை: எஸ். வி. மரியறேஸ் பீற்றர் 2-00— கம்பளை: ஏ. டி. சேவியர் 1-00 — அப்புத்தளை: எல். ஆபிரகாம் 1-00— கொள்ளுப்பிட்டி: ஏ. சந்தியாப்பிள்ளை 5-00— ஏழாலை: ஐ. வரப்பிரகாசம் 1-00, பி. அம்புறோஸ் 1-00— கல்கமுவா: அ. பஸ்ரியன் -50— அக்கரப்பற்றனை: எல். ஏ. எஸ். தோமஸ் 2-00— கல்கமுவா: சீ. செபஸ்தியாம்பிள்ளை 1-00— கொச்சிக்கடை: எம். எல். மிராண்டா 1-00— மறிச்சுக்கட்டி: எல். அருளம்மாள் 2-00 — மூந்தல்: மேரிமிராஸ் 1-00— மாருவில்: பிறும் அன்ரன் 11-00— கடுகண்ணவை: ஏ. ஜே. பிரான்சீஸ் 3-00— அற்றர்: எஸ். கிறிஸ்ரி -50— நாத்தாண்டி: வி. டி பி. பெறேரு 5-00— மட்டக்களப்பு: பி. பிரான்சீஸ் 1-00— கொழும்பு: பி. ஏ. மரியநாயகம் 5-00— கரவெட்டி: ச. வஸ்தியாம்பிள்ளை 3-00— மாம்புரி: ஏ. மரியாம்பிள்ளை 2-00— மகோ: வி. பிரான்சீஸ் 1-00 — கல்கமுவா: வி. ஊர்த்தியாள் -50 — கெபோடா: ஐ. கோமஸ் 1-00 — மூந்தல்: எம். அந்தோனிப்பிள்ளை 1-00 — புசலாவை: எவ். பி. சாமுவேல் 1-50 — தலவாக்கொலை: கே. ஜோண் 10-00 — நாவற்காடு: வ. சவிரிப்பிள்ளை 1-00—பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 1-00, ரி. எவ். சீமோன் 2-00, மிசெஸ் எஸ். வி. பீற்றர் 2-00— அம்பிற்றியா: எம். டானியல் 2-00— சுண்டிக்குளி: எம். இம்மனுவேல் 2-00— வவுனியா: எஸ். பாக்கியநாதர் 1-00— கல்கமுவா: ஜெ. சுவக்கீம் -50— புத்தளம்: மிஸ் ஆர். எம். பி. பிள்ளை 10-00 -- மாம்புரி: பி. சந்தியாப்பிள்ளை 5-00 — நக்குவாலை: எம். ரி. பெறேரு 1-00— பண்டாரவளை: ஜே. எஸ். பீற்றர் 2-00— வதுளை: எஸ். பெனடிக்ற் பீற்றர் 1-00— யாழ்ப்பாணம்: ஜே. பி. 1-00— நீர்கொழும்பு: கே. எஸ். மனுவல் அன்ரனி பெர்ணுண்டோ 1-50 — பண்விச்சவில்லூ: ஆர். எஸ். பி. தோமாஸ்பிள்ளை 3-00

**The Director,**
**St. Joseph's**
**Conference.**
**Bishop's House,**
**JAFFNA.**

**சென் வின்சென்ற் டி**
**போல்சபைத்தலைவர்**
**மேற்றிராசன**
**மாளிகை**
**யாழ்ப்பாணம்.**

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்கிலுள்ள பின்ஞற்குறிக்கப்படும் வேலைகளைச் செய்வதற்குவடமாகாண ஏசண்டரவர்கள் 1950-ம்ஆண்டு ஏப்பிரல் மாதம் 25-ந்திகதி செவ்வாய்க்கிழமை 12 மணி வரைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

1. யாழ்ப்பாணம் மணியகாரன் பகுதியிலுள்ள சின்னச்செம்மணி உப்புநீர் தடுக்கும் திட்டத்திலுள்ள திருத்தங்கள் செய்தல்.
2. பச்சிலைப்பள்ளி-கரச்சிப்பகுதி தட்டுவன்கொட்டிக் குளத்துக்கு தேவையான திருத்தங்கள்செய்தல்.
3. தீவுப்பகுதி பரவைக்குளத்துக்கும் இலைந்தைக்குளத்துக்கும் செய்யவேண்டிய திருத்தங்களைச்செய்தல்.
4. தீவுப்பகுதி சிலந்தாவிற்குளத்திற்கும் நவக்கையில் குளத்துக்கும் செய்யவேண்டிய திருத்தங்களைசெய்தல்.
5. தீவுப்பகுதி தேங்கன்குளத்துக்குச் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்தல்.
6. தீவுப்பகுதி வேனுக்குளத்துக்குச் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்தல்

மேற்சொல்லப்பட்ட ஒவ்வொருவேலைக்கும் வெவ்வேருக விண்ணப்பங்கள்செய்ய வேண்டும். குறித்தவிண்ணப்பப்பத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 25/- (இருபத்தைந்து) கச்சேரியிற்கட்டி வடமாகாண ஏசண்டர் கையொப்பம் இட்டஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொருபத்திரமாக 1950-ம்ஆண்டு ஏப்பிரல்மாசம் 22-ந்திகதி சனிக்கிழமை பகல் 12 மணி வரைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்களை வடமாகாணஏசண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## தாலாட்டுப்பாட்டின் கற்பனை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யான, மதுரமானதேனைத் தாய் தன் மகனுக்குக் கொடுக்க எண்ணுகின்றாள். தாய்மையின் அன்பை என்னென்று கூறுவது? தெய்வத்திடம்தமிழ்பெற ஔவை தேனைக்கொடுக்கின்றாள். தாய் தன் தனயனுக்கு அழுகையை நிறுத்தத் தேனை அர்ப்பணிக்கின்றாள். தெய்வ பாசமும், புத்திரபாசமும் ஒருபேதமும் காணப்படாததுபோன்று இருக்கின்றன. இதைக் கொடுத்தாவது மகனின் அழுகையைநிறுத்த முற்படும் அன்னைக்கு அத்தொட்டிலில் உறக்கம் கொள்ளும்மகவு தன்செம்பவளவாய் திறந்து பதில் கூறவேண்டுமே! அதுதான் இல்லையே. கதைக்கத்தெரியாப் பருவப்பிள்ளை எவ்வாறு கூறமுடியும்?

தாயின் மனம் புழுங்குகின்றது. என்ன செய்வதென்று அறியாது அலமலருகின்றாள். கடைசியில்... பிள்ளை அழுவதன் காரணம் எதுவெனக்கண்டுவிட்டாள். அவ்வுண்மையை பாலனே பாடுகின்றான். என்பதாக இசைக்கின்றாள்.

"பாலுக் கழுதேனம்மா
—அம்மா நான்
பசித்தழுதேன் மாதாவே"

பிள்ளை பால்குடித்துக் காலம்கடந்துவிட்டது. இதனல்பிள்ளை பாலுக்குத்தான் அழுததென்ற உண்மையைக் கண்டுவிட்டாள். பிள்ளையைத் தொட்டிலினின்று எடுத்தாள். மடிமீதுவைத்தாள். பாலூட்டுகின்றாள். அப்போது பிள்ளை அழாது பாலைக்குடிக்கின்றது. பாலனின்வதனத்தில் ஒருவிதமலர்ச்சி. அம்மலர்ச்சியைக்கண்ட தாயின் வதனத்தில் காணப்படும் மலர்ச்சிதான் எவ்வளவு? வதனத்தில்மட்டுமா? இல்லை. அவள் மனதிலும் மலர்ச்சியடைந்திருப்பாள்என்பதில் சந்தேகமில்லை. (தி. க.)

அதிஷ்டம் ஐயா! யாருக்கு? மீன்பிடி தொழிலாளருக்கே

"வலை மால்"

இப்பொழுது எங்களால் ஏராளமாகத் தருவிக்கப்பட்டு, மிகவும் திறமானதாகவும், நல்லமுறுக்குள்ளதாகவும், குறைந்த விலைகளில் மீன்பிடிப்பதற்குத் தேவையான தோலி வலைமால்கள், மடிமால்கள், மற்றஎல்லாவித தினுசுகளிலும் கீழ்க்கண்ட இடங்களில் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன.

எங்களிடமே உங்கள் தேவைகளைப்பெற்று மிகவும்
லாபகரமாய்திருப்தி அடையுங்கள்.

வி. பி. பி. மூலமாகவும் ஆடர்கள் அனுப்பப்படும்.

ஏ. எஸ். பெர்ணுண்டோ & பிரதர்ஸ்,

நம். 85, கிரேண் ஸ்றீட்,
"சந்திவலைக்கடை"
நீர்கொழும்பு.

நம். 79, யூனியன் பிளேஸ்,
கொம்பனித்தெரு,
"ஸ்லேவ் ஐலன்ட்"
கொழும்பு, 2.

## முருங்கன் தபால்

செந்நெற்கழனிகள் சூழ்ந்த முருங்கனில்விளங்கும் கிறீஸ்துஇராசாகோவிலில் சென்ற 7-4-50 பெரியவெள்ளிக்கிழமை வண. வில்லவாசிங்கம் சுவாமியவர்கள் தலைமையில் திருப்பாடுகளின்காட்சி காண்பிக்கப்படலாயிற்று. அன்றுகோவிலில் துக்கக்குறியே நிலவியது. பிற்பகல் 4 மணியளவில் அயற்கிராமங்களிலிருந்து திரளான மக்கள் கூட்டமாகவந்துசேர்ந்து செபமாலை, சிலுவைப்பாதை முதலியபக்தி முயற்சிகளில் பொழுதைப்போக்கினர். 6 மணிமுதல் திருமீட்பர் சிலுவையிலறையுண்டு மாணித்தகாட்சி வியாகுலபிரசங்கங்களுடன் காண்பிக்கப்பட்டது. அத்தருணம் வண. சூசைநாதர்சுவாமியவர்கள் திருப்பாடுகளைப்பற்றிச்செய்த உருக்கமான பிரசங்கம் எல்லோரையும் மனங்கசிந்துருகப்பண்ணியது. பின்னர் அறையுண்ட திருச்சுரூபம் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு ஆசந்தியில்வைத்து ஒப்பாரி புலம்பலோடும், மெழுகுவர்த்திகளோடும் கோவிலைச் சுற்றிவந்து உட்சென்றதும் கல்லறையில் பூச்சியமாக வைக்கப்படலாயிற்று. இத்திருக்காட்சியைச் சிறப்பாக நடாத்திய வண. குரவர்க்கும், மற்றும் பெரியார்க்கும் எம்நன்றி உரித்தாகுக.

—நிருபர்

—வத்திக்கானிலேசமீபத்தில்ஆரம்பமாகி நடைபெறவிருக்கும் மிஷனரிய சித்திரக்கலைப்பொருட்காட்சியிலே இந்தியகலைப்பொருட்காட்சிகளை ஒழுங்குபடுத்திவைப்பதற்காக வண. ஹெறூஸ் சுவாமியவர்கள் தமதுதுணைவர்களான இருகத்தோலிக்கருடனும் சிலதினங்களின்முன் ரோமாபுரிபோய்ச் சேர்ந்திருக்கின்றார்.

### மாவின்விலை குறையுமா?

கோதுமைமாவின் விலைசம்பந்தமாய் நமது அரசினர் ஆஸ்திரேலிய அரசாங்கத்துடன் கலந்துபேசிவருவதானது நன்மை அளித்திருப்பதாகத் தெரியவருகிறது. அதன்விளைவாய்த் தற்போதிலும் குறைந்தவிலையிலே ஆஸ்திரேலியா மாவைவிற்பனை செய்யும். அதனல் இலங்கையிலே தற்போது ஒரு ருத்தல் மாவின்விலை 28½ சதத்திலிருந்து 25 சதமாகக் குறையுமென்பது ஏறக்குறைய நிச்சயமாகிவிட்டது. இதனைத்தொடர்ந்து பாணின்விலையும் குறைக்கப்படவிருக்கிறது. அத்தால் வாழ்க்கைச்செலவும் சற்றே குறையவிருக்கிறது.

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇரக்கத்தாலும் பரிசுத்த் கன்னித்தாய், அர்ச். சூசையப்பர், அர்ச். ஆரோக்கியநாதர் எனும்ஆறுதல் அளிப்பவர்களின் மன்றாட்டாலும் என்வயிற்றுக்குற்றுக் குணமடைந்தது. பூரண சுகமடைய மன்றாடுகிறேன்.

Puloy S. Gerard

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், திருச்செபமாலைநாயகி, அர்ச். சூசையப்பர், அர்ச். பதுவைஅந்தோனியார், அர்ச். ஐந்துகாயப்பிரான்சிஸ்கு, அர்ச். நீத்தம்மாள், அர்ச். நீக்கிலாவுமுனீந்திரன், சங். சகோதரி அல்போன்சம்மாள் முதலானவர்களின் மன்றாட்டாலும் சில ஆச்சரியமான நன்மைகள் பெற்றுக்கொண்டோம். இந்த அர்ச்சியசிஷ்டர்களின் பேரால் பரிசுத்தபாரமதிரீத்துவம் நித்தியகாலம் ஸ்துதிக்கப்படுவதாக. E. A. S.

### சத்தியவேத பாதுகாவலன்

Supplement to the Catholic Guardian

வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்

**கையொப்ப விகித**

முற்பணமாகக் கட்டவேண்டும்

| | தமிழ் | தமிழும், இங்கிலிசும் |
|---|---|---|
| இலங்கை | | |
| வருஷம் | 5-50 | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | 5-50 |
| மற்றும் தேசங்களுக்கு | | |
| வருஷம் | 6-00 | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.

மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 13 1950.